www.padippakam.com

நவ'88 — ஜன '89 மக்கள் கலை இலக்கியக் கழக இதழ் விலை : ரூ. 1-50

# புதிய கலாச்சாரம்

## வரதட்சணைக் கொலைகள்



www.padippakam.com

# கேட்டீரா சேதி!



## பிரதமரே தணிக்கை அதிகாரி!

'அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்கள். ராஜீவ்காந்தி விஷயத்தில் அது மிகப் பொருத்தம். அரசியல் திரைப்படங்களால் தலைவலி. செய்திப் படங்களால் தலைவலி. சரி இவைதான் இன்றைய நாட்டு நடப்பைச் சொல்வதால் எங்கே தனது ஆட்சியை அம்பலப்படுத்தி விடுமோ என்று ராஜீவ்காந்தி பயப்படுவதில் அர்த்தமிருக்கிறது. மகாபாரதக் கதைக்குமா பயந்து சாக வேண்டும்?

தொலைக்காட்சியில் காட்டப்படும் மகாபாரதக் கதையில் மன்னன் பரதன் தனக்குப் பின் அரசுரிமையை தனது பிள்ளைகளிடம் ஒப்படைக்கமாட்டேன் என்கிறான். ''மரபுப்படி உங்கள் வாரிசுகள்தான் அரசாள வேண்டும்'' என்று மந்திரிப் பிரதானிகள் ஆலோசனை கூறுகின்றனர்.

''அப்படியானால் மரபை மாற்றுவோம்... தங்களது செயல்பாடு மூலம் தங்கள் தகுதியை எனது பிள்ளைகள் நிரூபிக்க வேண்டும். தனது பிள்ளைகளின் நலனில் மட்டும் அக்கறை செலுத்துவதல்ல மன்னனின் கடமை. மக்களின் நலன்தான் பிரதானமானது'' என்று பதில் சொல்கிறான் மன்னன். வசனம்தான் நெருடலாக இருக்கிறதென்றால் அந்த வசனத்தைப் பேசும் பரதனாக நடிக்கும் ராஜ் பாபர் என்ற நடிகர் வி.பி.சிங் கட்சிக்காரர்.

இது போதாதா? இந்த வசனங்களை வெட்டச் சொல்லி விட்டாராம் ராஜீவ் காந்தி. தொலைக்காட்சியில் மகாபாரதத்தைப் போட்டால் அதை தணிக்கை செய்யும் வேலையையும் பிரதமர் செய்யவேண்டும் என்ற நிலைமை. குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் காக்கை வடையைத் திருடிய கதையைப் போடுவதாக இருந்தாலும் பிரதமர் தணிக்கை செய்தபின்தான் போட முடியும் போலும்!

## உண்மை இனிப்பதில்லை

கடவுளின் பெயரைச் சொன்னால் இனிக்கும் என்று சரடுவிடுவார்கள். தமிழில் ஏராளமான பாட்டுக்கள் இருக்கின்றன. மகாராட்டிராவில் ஒரு சாமியாரை நக்கினால் இனிக்கிறதாம். ஜே ஜே என்று கூட்டம் கூடிவிட்டது அற்புதத்தைப் பார்க்க. சாமியாருக்கே 'தித்திப்புச் சாமியார்' என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

அண்மையில் இந்த மோசடியை அம்பலப்படுத்தியிருக்கிறார் பகுத்தறிவாளர் பிரேமானந்த். தித்திப்பின் ரகசியம் என்ன தெரியுமா? சர்க்கரை, சாக்கரின் இரண்டும் கேள்விப்பட்டிருப்பீர்கள். சர்க்கரையைவிட 800 மடங்கு, சாக்கரினைவிட 400 மடங்கு இனிப்புள்ள எஸ்பர்டாமி என்ற ரசாயனம் இருக்கிறது.



அதை ரகசியமாக உடம்பு முழுவதும் பூசிக் கொண்டு தரிசனத்துக்கு வருகிறான் அந்தப் போலிச் சாமியார்.

சாமியாரின் உடம்பு தித்திக்கலாம்; ஆனால் உண்மை கசக்கிறதே!

## ஆங்கிலத்திற்கு ராஜீவின் பங்களிப்பு!

போபர்ஸ் பீரங்கி வாங்கியதனால் யாருக்கு லாபம்? ராஜீவ் காந்திக்கும் அமிதாப் பச்சனுக்கும் கமிஷன் தொகை லாபம், பீரங்கிக் கம்பெனிக்கு லாபம். வின் சத்தாவுக்கு லாபம். இன்னும் பல மேல் மட்டங்களுக்கு லாபம்.

இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் பீரங்கி பேரத்தில் கமிஷன் வாங்கியதன் மூலம் ராஜீவ் காந்தி யாரும் எதிர்பாராத வகையில் ஒரு சாதனை புரிந்திருக்கிறார்.

புதிதாக வெளியிடவுள்ள ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் புதிதாக பழக்கத்திற்கு வந்திருக்கும் 5000 சொற்களைச் சேர்க்கப் போகிறார்கள். அதாவது ஆங்கிலத்தை மேலும் வளப்படுத்தப் போகிறார்கள். அவ்வாறு சேர்க்கப்படவுள்ள சொற்களில் ஒன்று போபோரைஸ் boforise என்ற வினைச்சொல். பித்தலாட்டம்செய்வது என்ற பொருளில் இந்தச் சொல் ஆங்கில அகராதியில் சேரப்போகிறது.

எது எப்படிப் போனாலும் ஆங்கில மொழிக்கு ஒரு சொல் லாபம்! ஆங்கில மொழிக்கு திருவாளர் ராஜீவின் பங்களிப்பு இது!

## மளிகைக்கடையில் மது விற்கலாம்!

குடிகாரர்களுக்கும் சாராய வியாபாரிகளுக்கும் ஒரு நற்செய்தி. பீர், மற்றும் ஒயின் (திராட்சை மது) ஆகியவை சாராய வகையைச் சேர்ந்தவையல்ல. அவை உணவுப் பொருட்களே என்று முடிவு செய்திருக்கிறது ராஜீவ் அரசு.

பார்லி என்னும் உணவுப் பொருளிலிருந்து தயாரிக்கப்படுவதால் பீர் உணவுப் பொருள்; திராட்சைஎனும் உணவுப்பொருளிலிருந்து தயாரிக்கப்படுவதால் ஒயின் உணவுப்பொருள். அடுத்தப்படியாக வெல்லத்திலிருந்தும் சர்க்கரைக் கழிவிலிருந்தும் (molasses) தயாரிக்கப்படுவதால் பிராந்தியும் உணவுப் பொருளே என்று அறிவிக்கப்படலாம்.

ராஜீவ் அரசின் புதிய உத்திரவின் அடிப்படையில் டெல்லியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டல்கள் தங்கள் கடைகளில் பீர், ஒயின் விற்க அனுமதி கோரியுள்ளனர். மற்ற மாநிலங்களுக்கும் இந்த 'மக்கள் நல்வாழ்வு'த் திட்டத்தை உடனே அமல்படுத்தும். ஆக, ஓட்டல்களில் டீ, காபியுடன் சாராயம் விற்கப்படும். மளிகைக் கடைகளில் உப்பு, புளியுடன் பீர், ஒயின் விற்கப்படும்.

உலகிலேயே நம் நாட்டில் தயாராகும் பீரில்தான் போதையும் சாராயத்தின் அளவும் அதிகமாக உள்ளது என்கிறார்கள் இதை எதிர்ப்பவர்கள். அதைப்பற்றி ராஜீவ் அரசுக்கு என்ன கவலை? பீரில் உள்ள போதையை விட அதில் கிடைக்கும் கமிஷனின் அளவு அதிகமாயிற்றே!



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

● போர் : 6
● குரல் : 3,4,5.
● நவம்பர்—டிசம்பர்'88
ஜனவரி'89

உள்நாடு:
தனி இதழ் : ரூ 2
ஆண்டுச் சந்தா : ரூ 8

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
தனி இதழ் : ரூ 8-50
ஆண்டுச் சந்தா : ரூ 24

படைப்புகள், சந்தா
அனுப்பவும், மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

அ. முகுந்தன்,
55, நேரு நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.

## கருத்துச் சுதந்திரம்: கழுத்தில் வைத்த கத்தி எடுக்கப்படவில்லை!



ஒன்றன்பின் ஒன்றாக அம்பலமாகி வந்த ஊழல்களாலும், தொடர்ச்சியான தோல்விகளாலும் ஆத்திரமடைந்து, மதிகெட்டுப்போன பாசிச ராஜீவ் கும்பல் பத்திரிக்கைகளுக்கெதிராக அவதூறுத்தடை மசோதாவை அறிமுகப்படுத்தியது. தனது கட்சியினருக்கே ரகசியமாக வைத்திருந்து பாராளுமன்றத்தில் யாரும் எதிர்பாராமல் அவிழ்த்து விடப்பட்ட இம் மசோதா, ராஜீவ் கும்பல் சற்றும் எதிர்பாராத அளவு எதிர்ப்பைத் தோற்றுவித்தது. அரசியல் அரங்கிலிருந்தே முற்றிலுமாகத் துடைத்தொழிக்கப்பட்டு விடுவோமோ என்ற பீதியிலும், வழக்கமான கோஷ்டி பூசலின் பின்னணியிலும் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினரே பகிரங்கமாக எதிர்ப்பை வெளியிடத் தொடங்கினர். ''இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியத்தைத் தோற்றுவித்த ஏதேனும் ஒரு அவதூறைக் குறிப்பிட இயலுமா?'' என்ற கேள்விக்குக்கூட பதில் சொல்ல இயலாமல் ப. சிதம்பரம் விழித்ததிலிருந்தே ராஜீவ் கும்பல் தனது பாராளுமன்ற மிருக பலத்தை மட்டுமே நம்பி இச்சட்டத்தைக் கொண்டு வந்தது என்பது அம்பலமாகிவிட்டது.

'ஆதாரம் என்பதற்கு மசோதா அளித்த விளக்கம், குற்றம் சாட்டப்பட்டவர்தான் நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்ற தலைகீழான அணுகுமுறை, செய்தியாளர்களையும் ஆசிரியரையும்வெளியீட்டாளரையும் பகிரங்கமாக வேட்டையாடும் பிற ஷரத்துக்கள்—ஆகியவற்றால் ஆத்திரமடைந்த உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் ஒன்றுபட்ட எதிர்ப்பு அணியைக் கட்டினர். ஒரு தொழில் என்ற முறையில் பார்த்தாலும் பத்திரிக்கைத் தொழிலை முடக்குகின்ற காரணத்தால் பத்திரிக்கைத்துறைப் பெருமுதலாளிகளும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

'உட்கார்ந்து பேசுவோம்' என்று பத்திரிக்கைகளுக்குத் திரும்பத் திரும்ப விடுத்த அழைப்புகள் புறக்கணிக்கப்பட்ட பின்னர், குப்புற விழுந்த ராஜீவ், மசோதாவை வாபஸ் பெற்றுக் கொண்டு மீசையில் மண் ஒட்டாததைப் போல ஒரு அறிக்கை வெளியிட்டார். 'சுதந்திரமான பத்திரிக்கைத் துறை இல்லையேல் ஜனநாயகம் இல்லை' என்ற சொல்லலங்காரங்களால் தனது உள்நோக்கத்தை ராஜீவ் கும்பல் மறைக்க முயன்றும் இயலவில்லை. ''மசோதா வாபஸ் பெறப்பட்டுள்ளது. ஆனால் அவதூறு குறித்தபிரச்சினை நீடிக்கிறது'' என்று கூறி பத்திரிக்கைத் துறையில் உள்ள தனது கைக்கூலிகள் மூலம் ஒரு விவாதத்தைத் தோற்றுவிக்க முயல்கிறது. தமிழகத்தில் 'தீவிர' காங்கிரஸ் எதிர்பாளனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் துக்ளக் சோ இதற்கு ஒத்துப் பாடியுள்ளார். பெயரளவில் நிலவும் கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தில் வைக்கப்பட்டிருக்கும் கத்தி அப்படியேதான் இருக்கிறது.

●

அவதூறு மசோதா விலக்கிக் கொள்ளப்பட்டதற்காக ராஜீவுக்கு எழுப்பப்பட்ட வாழ்த்தொலிகள் அடங்கு முன்னரே அடுத்த விவகாரம் கிளம்பிவிட்டது. சல்மான் ரஷ்டி என்னும் எழுத்தாளரின் (இங்கிலாந்தில் குடியேறிய இந்தியர்) ''சாத்தானின் வேதம்'' (Satanic Verses) எனும் நாவல் இந்தியாவில் வெளியிடப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது இந்தக் கற்பனைப் புதினத்தின் ஒரு பாத்திரம் முகம்மது நபியை ஒத்திருப்பதாகவும், அப்பாத்திரம் சித்தரிக்கப்பட்டிருக்கும்முறை முகமது நபியை இழிவுபடுத்துவதாக இருக்கிறது என்றும், எனவே இந்நூல் தடைசெய்யப்பட வேண்டும், என்றும், ஜனதாக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் இஸ்லாமிய மதவெறிக்கும்பலின் முக்கியப் புள்ளியுமான சையது சஹாபுதீன் எழுப்பிய கூக்குரலுக்கு பாசிச ராஜீவ் கும்பல் உடனே செவி சாய்த்து இந்நூலைத் தடை செய்துவிட்டது.

வெட்கக் கேடான முறையில் சுங்கவரித்துறையின் மூலம் இந்நூலின் இறக்குமதியைத் தடுத்தது மட்டுமல்ல. சிறிதும் கூச்சமின்றி தான் அந்த நூலைப் படிக்கவில்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறார் ராஜீவ். மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்திய கதையாக, அந்த நூலின் சில வரிகளைக் 'கேடாகப்' பயன்படுத்திக் கொண்டு பிற்போக்கு சக்திகள் கலவரத்தைத் தூண்டக் கூடும் என்பதால்தான் தடை செய்தோம் என்று சப்பை கட்டுகிறது ராஜீவ் கும்பல். இந்நூலில் மதத்தையோ மதவெறியையோ அம்பலப்படுத்தி உருப்படியாக எதுவும் எழுதப்படவில்லையெனினும், விரிவான அளவில் நடுத்தர வர்க்கத்தினர் படிக்கத்தக்கதுகூட அல்ல எனினும் இத்தடை எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

இந்நூல் மட்டுமல்ல ''இயேசு கிறிஸ்துவின் கடைசி இச்சை'' (The Last Temptation of Christ) என்ற ஹாலிவுட் திரைப்படத்துக்கும் கிறித்தவ மதவாதிகளின் கோரிக்கையை ஏற்று தடைவிதித்திருக்கிறது ராஜீவ் அரசு. இயேசு கிறிஸ்து மேரி மகதலீனாவைக் காதலிப்பதுபோல கனவு காண்பதாக ஒரு காட்சி இத்திரைப்படத்தில் வருகிறது. ''படத் தயாரிப்புக்குச் செலவான 15 கோடி ரூபாயையும் கொடுக்கிறோம். படச்

படிப்பகம்

www.padippakam.com

சுருள்களை ஒப்படையுங்கள் கொளுத்தி விடுகிறோம்' என்று அமெரிக்காவின் 'காம்பஸ்க்ருசேட்' என்ற கிறித்தவ மதக்குழு வெறிகொண்டு அலறியிருக்கிறது. இத்தனையும்மீறி படம் அங்கே ஓடிக் கொண்டிருக் கிறது. ஆனால் இங்கே தடை.

இந்தத் தடைகளுக்கு எதிராக அன்றைக்கு வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் நிற்கும் எக்ஸ் பிரஸ், இந்து பத்திரிக்கைகளும் இன்னபிறகும், சில மாதங்களுக்குமுன் அம்பேத்காரின் ''இந்து மதத்தின் ஓட்டைகள்'' என்ற நூலை எதிர்த்து பம்பாயில் சிவசேனை கலவரம் நடத்திய போதும், அதில் குறிப் பிட்ட சில பகுதிகளை நீக்கிவிட்டு மகாராட்டிர அரசு அச்சிட்டபோதும் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இன்று மாபெரும் ஜனநாயக வாதிகளைப்போல வேடமிட்டு ஆடுகிறார்கள். மதசார்பின்மை என்ற பெயரில் மதத்தையும், மத வெறியையும் அம்பலப்படுத்தும் கருத்துக்களைப் பல் வேறு அரங்கங்களிலும் இந்திய அரசு—எல்லா ஆளும் கட்சிகளுமே—தடைசெய்தே வந்திருக்கிறது. ராஜீவிற்கு மாற்று என்று சொல்லிக் கொள்ளும் தேசிய முன்னணிக் கும்பல் இந்தத் தடைகளை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையென் பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

## அதிகரிக்கின்றன மதவெறிக் கொலைகள்!

முன்னெப்போதும் கண்டிராத அளவு மதக் கலவரங்கள் அதிகரித்து வருகின்றன. அரசியல் பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாதென்ற நிலையில் அவர்களை மதவாத சகதியில் இழுத்து விடுவதில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஈடுபடுகின்றன. இதற்கு 'மார்க்சிஸ்டு'களும் விதிவிலக்கல்ல என்பதை மேற்கு வங்க மாநிலம், காசிம்பஜார் நகரில் நடை பெற்ற முஸ்லீம்களின் மீதான தாக்குதல் நிரூபிக் கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையால் எடுத் துக் கொள்ளப்பட்ட மசூதியை தொழுகைக்கு மீட்டுத் தருவதாக முஸ்லீம்களுக்கு 'மார்க்சிஸ்டு' கட்சி மந்திரியே வாக்குறுதி கொடுத்தது கவனிக்கத் தக்கது.

கர்நாடக மாநிலம் பிதாரில் சிவசேனையால் சீக்கியர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் வர்க்க முரண்பாடுகளுக்கு மதச்சாயம் பூசப்படுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்து மதவெறி தூண்டப்பட்ட போதும் பெரும்பான்மை இந்துக்கள் அதற்கு இரையாகாமல் அப்பாவி சீக்கியர்களைப் பாது காத்துள்ளனர். ஆனால் சிவசேனையின் பாசிச குண்டர்படையை எதிர்த்துப் பேசுவதற்குக்கூட மக்கள் அஞ்சுகிறார்கள் என்பதிலிருந்து இந்தக் கொலைப்படைகளை உடனடியாக ஒழித்துக் கட்ட வேண்டியதன் அவசியம் புலனாகிறது.

காஷ்மீரில் உதம்பூர் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் பகிரங்கமாகவே இந்து மதவெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது என்று ராஜிவ் ஆதரவு பருக் குற்றம் சாட்டுகிறார்; ஆட்சியில் நீடிப்பதற்காக எத்தகைய கேடு கெட்ட செயலையும் ஆதரிக்க ராஜீவ் கும்பல் தயாராக விட்டது.

## போலித் தேர்தலைப் புறக்கணிப்போம்!

பாசிச ராஜீவின் தமிழகச் சுற்றுப் பயணங்கள் தமிழகத் தேர்தலை மட்டுமல்ல, எவ்வாறேனும் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றிவிடத் துடிக்கும் காங்கிரஸின் வெறியையும் காட்டுகின்றன. வட மாநிலங்களனைத்திலும் ஏற்பட்டு வரும் சரிவை ஈடுகட்ட தமிழக தேர்தல் வெற்றியை ராஜீவ் கும்பல் பெரிதும் நம்பியிருக்கிறது. கட்சிகளை உடைப்பது, பேரம் பேசுவது, பத்திரிகைத் துறையில் கூலிகளை உருவாக்குவது, கட்சி சாராத அமைப்புகள் என்ற பெயரில் சி. சுப்பிரமணியம், உதயமூர்த்தி கும்பலை வைத்து மறைமுகமாக ஆதரவு திரட்டுவது, சினிமா நட்சத்திரங்களை வளைத்துப் போடுவது ஆகிய அனைத்து உத்திகளும் கையாளப்படுகின்றன. ''ராஜீவும், அலெக்ஸாண்டரும்தான் நமது பிரச் சினையில் அக்கறை செலுத்துகிறார்கள்'' என்று வன்னியர் சங்கத் தலைவர் ராமதாஸ் விலை போயி ருப்பது தெரிகிறது. முடிந்தால் வன்னியர்வாக்குகளை வளைத்துப் போடுவது இல்லையேல் மிகப்பெரிய அளவில் வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் மோதலைத் தூண்டிவிட்டு வாக்குச் சாவடியைக் கைப்பற்றுதல், வாக்களிக்க விடாமல் தடுத்தல் ஆகிய முறைகளைக் கையாண்டு நாற்காலியைப் பிடிப்பது என்றுகாங்கிரஸ் கும்பல் திட்டமிட்டிருக்கிறது. ஊழல், அதிகார துஷ் பிரயோகத்தில் கணிசமான 'புகழ்' ஈட்டியிருக்கும் திமுகவும் சாதி முதல் சினிமா வரை அனைத்து ஆயுதங்களையும் கையில் எடுத்திருக்கிறது. செயற்கை யான தேர்தல் பரபரப்பு உருவாக்கப்பட்ட போதும் ஓட்டுக் கட்சிகள்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பு குறையவில்லை. தேர்தல் புறக்கணிப்பு முழக்கத்தின் கீழ் மக்களை அணிதிரட்ட வேண்டியது புரட்சிகர சக்திகளின் கடமை.

இலங்கை:

## ஓட்டளிக்காத தேர்தல். 'ராஜீவ் ஜனநாயகம்!'

தனது விஸ்தரிப்பு வெறியில் உரலுக்குள் தலையைக் கொடுத்திருக்கிறது ராஜீவ் கும்பல். ஈழத்தில் இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கி ஒருஆண்டு ஆனபின்னரும் தான் சவடால் அடித்ததுபோல புலிகளை அடக்கவோ 'அமைதி'யை நிலைநாட்டவோ இயலாவிட்டாலும் தேர்தல் என்ற பெயரில் அஸ்ஸாமைவிட மிகப்பெரிய கேலிக் கூத்தொன்றை ஈழத்தில் அரங்கேற்றியிருக் கிறது.

ராணுவ ரீதியாக புலிகளின் பலம் குறைந்த போதிலும் ஈழமக்களின் உறுதியும், வெளிநாட்டில்குடி யேறிய ஈழத்தமிழரின் தொடர்ச்சியான பிரச்சாரம் இந்திய ஆளும் வர்க்கத்தின் முகத்திரையைக்கிழித்து வருகின்றன. தமிழகத்தில் தங்கியிருந்த புலிகளை பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ததும், எதிர்ப் பைக் கண்டஞ்சி இரவோடிரவாகக் கடத்திச் சென்று ஈழத்தில் காவலில் வைத்திருப்பதும் ராஜீவ் கும்பல் நிலைகுலைந்து போயிருப்பதையே காட்டு கிறது.

பெரிதாகப் பீற்றிக் கொள்ளப்பட்ட இந்திய— இலங்கை ஒப்பந்தம் காற்றில் பறக்கிறது. வடக்கு— கிழக்கு இணைப்பையும், இந்திய ராணுவம் இலங்கை மண்ணில் நீடிப்பதையும் எதிர்த்து பிரேமதாசா பகிரங்கமாகப் பேசும்போது ராஜீவின் 'ராஜ தந்திரி கள்' வாயடைத்து நிற்கின்றனர். ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொடுத்தும் ஈழத்தமிழர்கள் தங்கள் இறை யாண்மையை நிலைநாட்டிக் கொள்வதில் தளர வில்லை. இந்திய ராணுவம் ஈழத்திலிருந்து தனது கூடாரங்களைப் பிரிக்க வேண்டிய நாள் நெருங்கு கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

# சட்டத்தின் கரங்களுக்கு 'எட்டாத' குற்றவாளிகள்



"ஐயோ நெருப்பு, பத்தி எரியுதே, யாராவது காப்பாத்துங் களேன், ஓடி வாங்களேன். அக்கா, அக்கா, கதவைத் திறங்க. எரியிறேனே எரியிறேனே, நெருப்பு வச்சிட்டானே பாவி நெருப்பு வச்சிட்டானே!"

—தீ பற்றி எரியும் நிலையில் சன்னா பக்கத்துக் குடித்தனக் காரர் வீட்டுக்கதவைத்தட்டினார். கதவு திறந்தது. ஒரு பெண், வெளியே சன்னா எரிவதைப் பார்க்கிறாள். உடனே கதவு தாளிடப்படுகிறது. "ஐயோ, காப் பாத்த யாருமே இல்லையா?" — இங்கும்அங்கும் ஓடினாள் சன்னா. காற்று விசிறி விசவீச அவள் முழு வதுமாக எரிந்து போனாள்.

ஃ ஃ

முன்பு புராணத்தில் ஒரு சீதை. அவளது கற்பைச் சந்தேகித்த 'கடவுளின் அவதாரம்' ராமன். அவளை நெருப்பில் தள்ளினான். இன்று ஒரு சன்னா. சாதாரண குடும்பப் பெண் என்ற ஒரு தகுதி யோடு அவள் ஒருபெண் போலீஸ். கணவன் கிரிதரன் ஓர் ஆண் போலீஸ்—சன்னாவின் அழகுக் காகவே அவனை மணந்தான். அதே அழகுக்காகவே அவளை ஓயாது சந்தேகித்தவன்; ஒருநாள் எதிர்பாராத நேரத்தில் அவள்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீயும் வைத்துவிட்டான், வெறியன் கிரி தரன்.

கொதிக்கும் சோற்றுச் சட்டி யைத் தொட்டுவிட்டாலே 'உய்' என்று கையை உதறிக் கொள் கிறோம். ஒரு முழு உடம்பை எண் ணெய் ஊற்றிக் கொளுத்திப்போடு கிறார்களே—எத்தனைப் பெரிய காட்டுமிராண்டித்தனம்?

எத்தனை சன்னாக்கள்?

ஃ ஃ

உசிலம்பட்டிக்கு ஓடோடி வந்தார்கள் பஞ்சவர்ணத்தின் தாய், தகப்பன், உற்றம், சுற்றம். "எம்மவளுக்கு என்னாச்சு...? நல்லாத்தானே இருந்தா?... ஒரு நோநொடுவு எதுவும் இல்லியே... எம்மவள காட்டுங்கடா..." கதறி னார்கள்.

எரிச்சாச்சு' மருமகன் ஜெய பால் அசத்தலாக ஒரே வார்த்தை யில் பதில் சொன்னான்.

'பாவிகளா. எங்களுக்குத் தகவல் தராம எப்படிடா எரிச் சீங்க?'

"அவளா திவச்சுச் செத்துட் டா... உடம்பு கருகிப்போச்சு. அத னாலே நாங்களே எரிச்சுட டோம்!"

பஞ்சவர்ணம் இந்த அழுகல் சமுதாயம் கிழித்த கிறுக்கல் கோடு களை எல்லாம் அப்படியே நம்பிய வள். கொலைக்கு 5 வருடங்க ளுக்கு முன்பு கூடலூர் ராமுத் தேவர் மகன் ஜெயபாலுக்கு 25 பவுன் நகை பேசி 16பவுனும், ரூபாய் 8000 ரொக்கமும், மருமக னுக்கு 1பவுன் மோதிரமும், ஏராள மாய்ச் சீர் வரிசையில்செய்து திரு மணச் சந்தையில் விற்கப்பட்டாள் பஞ்சவர்ணம்.

"பணமகளாக இருந்தால் தான் மணமகளாக முடியுமா?" என்று ரேடியோ தினமும் கத்து கிறது. ஆமாம். அதுதான் நடக் கிறது. பஞ்சவர்ணம் புகுந்த வீடு சென்ற நாளிலிருந்தே துன்புறுத் தப்பட்டாள். 'எங்கேடி மிச்சம் 9 பவுன்?'—அடி, உதை. ஏழை விவசாயி மாயாண்டித் தேவர், பஞ்சவர்ணத்தின் தந்தை; எங்கே போவார் உடனே பணம்கொண்டு வர! 3 ஏக்கரா நிலத்தை 'வெள் ளைப் பத்திரமாக' எழுதிக் கொடுத்து ஈடுகாட்டச் சொல்லி மகளை அனுப்பினார். போன கையோடு திரும்பினாள் மகள்— 'நகையோடு வா, இல்லேன்னா என்னை மறந்துபோ!' மருமகன் உதைத்துப் படுகாயங்களோடு திருப்பி விட்டான்.

மாயாண்டிக்கு வேறு வழி தெரியவில்லை. தொடைச் சதை யை அரிந்து பருந்துக்குக் கொடுத் தவன்போல நிலத்தை அரித்து எட்டரைப் பவுனைக் கொட்டி அளந்தார். மருமகனின் ஆசைத்தீ அவிந்து குளிர்ந்துபோகும் என்று கனாக் கண்டார். அது மட்டு மீறிப் பற்றியது; மறுபடி பணம் கேட்டான் மருமகன்.

அன்று நடந்த கதையை மாயாண்டியின் தாய்வைக்கும் ஒப் பாரியில் கேளுங்கள். "ஏ... அப்பே... அந்தப் பாழாப் போற வன் இப்பிடி அடிச்சுத் தொவச்சி அனுப்பி வைக்கிறானேன்னு, நான்கூட 'தீர்த்துடுவோம்'னு சொன்னப்பே. கேட்டாளா பாவ மக? மாட்டேன்னு சொல்லிட் டால்லே. தீர்த்துப்புட்டு வேற எவ னுக்காச்சும் கட்டி வைப்பீங்க. அதுக்குநான் இங்கேயே இருந்துக் கறேன்னு சொன்னாளேப்பே... இப்ப இப்படிச் சாகடிச்சிட்டாங் களேப்பே .. சாகடிச்சாட்டாங் களே..."

ஃ ஃ

## பெண் கொலைகள் அதிகரிப்பது ஏன்?

எத்தனை சன்னாக்கள்? எத் தனை பஞ்சவர்ணங்கள்?

இன்ன ஜாதி என்றில்லை இன்ன மதம் என்றில்லை, இன்ன மாநிலம், வட்டாரம் என்றில்லை இந்தியா முழுவதும் நடக்கப்படு



வரதட்சணைக் கொடுமைக்கு எதிராகப் பெண்கள் போர்க்கொடி! பெண்ணைப் பறிகொடுத்த தாய் கதறுகிறார்


படிப்பகம்

www.padippakam.com

கின்ற அக்கிரமம், அட்டூழியச் செயல் மணப்பெண் எரிப்பு. கடந்த ஓரிரண்டு ஆண்டுகளிலேயே பத்துப் பத்து மடங்காக அதிகமாகிப் பரவிக் கொண்டே வருகிறது. '86ல் மட்டும் இந்தியா முழுக்கவும் ஏறக்குறைய 1500 கொலைகள் நடந்துள்ளன. இது அரசாங்கப் புள்ளி விவரம். உண்மையான விவரம் அதிகமாகவே இருக்கும்.

அதிகரித்துவரும் இக்கொலைகளை எதிர்க்கின்ற பல ''பெண்கள் சீர்திருத்த அமைப்புக்கள்'' குற்றமிழைத்தவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனை தர வேண்டுமென்று போராடுகின்றன. அது போதாதென்பது ஒருபுறம் இருக்கட்டும். கொலைகளை 'வரதட்சணைக் கொலைகள்' என்று சொல்கிறார்கள்; அது தவறு. பெண்களைக் கொடுமைப்படுத்துவதில் பல வழிகளில் இதுவும் ஒன்று—எல்லை மீறியது என்று வாதிக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்க முடியும்.

படித்தவளோ, படிக்காதவளோ, அடிமையாக வாழ விரும்பாதவள் எதிர்க்கிறாள்; சமையல் அறைக்குள் முடங்குவதில்லை; படுக்கையறைக்குள்ளும் நினைத்த போதெல்லாம் உடலுக்குத் தீனி கேட்கும் ஆண் ஆதிக்கத்தை அவள் வெறுக்கிறாள். மாற்றம் விரும்பும் இவளையும் சரி, கேட்கிற பணததைக் கொண்டு வாரத அடிமையையும் சரி இந்தக் கொடியவர்கள் அழித்துப் போடுகிறார்கள். இதற்கும் முன்பேகூட எதிர்ப்பைத் தெரிவிக்க வேறு வழியே இல்லாத போது தற்கொலைகள் செய்து கொண்டு விடுகிறார்கள் அந்தப் பெண்கள். எனவே, தெரியவரும் நெருப்புக் கேசுகள் மட்டுமல்ல, தெரியாமல்நடக்கின்றதற்கொலைகளுக்கும் காரணம் ஒன்றுதான்.

## சட்டம், காகிதப்புலி

இதை எல்லாம் தட்டிக் கேட்க சட்டங்கள் வேண்டும் என்கிறார்கள் பெண் உரிமை கோருபவர்கள். சட்டங்கள் காகிதப் புலிகள், ஒன்றுக்கும் உதவாதவை.

இந்தியச் சட்டப் பிரிவில் நான்கு குற்றவியல் சட்டங்கள் உள்ளன. இபீகோ 406 (வரதட்சணைத் தடுப்பு), இபீகோ 302 (கொலை), 304பி, 306 (தற்கொலைக்குத் தூண்டுவது, சித்திரவதை), 498ஏ (கணவன் அல்லது அவனது சுற்றத்தாரின் கொடுமைகள்). கொலைகள் போலீசாலும், மேஜிஸ்டிரேட்டாலும் தீர விசாரிக்கப்படவேண்டும். அவ்வாறு நடப்பதில்லை. எல்லாம் ஏட்டளவோடு சரி; சமரசத்துக்



''திடீரென்று விழித்துக் கொண்டேன். என் கணவன் என் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டிருந்தான்...''

வரதட்சணையில் வெந்த ஒரு முஸ்லீம் பெண்: சாரதா

காக பெண்ணின் பெற்றோர்களோடு 'இனிப்பு வார்த்தை' பேசி அடக்கி விடுகிறார்கள்; இறுதியான மேஜிஸ்டிரேட் விசாரணை கேலியாக நடக்கிறது. உடல் முழுவதும் வெந்து ஜன்னி கண்டு கிடக்கும் ஒரு பெண் மனத்திலும் அதிர்ச்சி கண்டுவிடுகிறாள். மேஜிஸ்டிரேட் விசாரணை அப்போதுதான் நடக்கிறது.

இந்தக் 'கடைசி வாக்குமூலத்தைத்தான்' மேஜிஸ்டிரேட்டு நம்புகிறார் என்றால் கேலிக்கூத்தாக இல்லை?

ஒரு கொலையாளி கச்சிதமாக காரியத்தை முடித்துவிட்டான். சாட்சி அவனைக் காட்டி 'அவன்தான் கொன்றவன். பாவம், போனால் போகிறான் விட்டு விடுங்கள்' என்று சொன்னால் சட்டம் விட்டுவிடுமா? ஏறுடா தூக்கில் என்றுதானே சொல்லும். அது போலத்தானே இந்தக் கடைசி வாக்குமூலம்? ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை? கொலைகளில் சம்பந்தப்பட்ட எவருமே தண்டிக்கப்பட்டதாகத்தகவல்கள் இல்லையே ஏன்? ஆண் ஆதிக்க குடும்பத்தின் 'பெரிய மனுசர்கள்', போலீஸ், மேஜிஸ்டிரேட் எல்லோரும் கூட்டுச் சதி செய்கிறார்கள். யார் இவர்களைத் தண்டிப்பது?

## போலீஸ் என்ன செய்கிறது?

சட்டத்தில் ஓட்டை என்றால் அதைப் படைக்கின்ற அரசைத்தான் கேட்கவேண்டும்? சுதந்திரம், ஜனநாயகம் என்கிறார்களே, பெண்களுக்கு உரிமையில்லையே, இதற்கு அரசு என்ன செய்திருக்கிறது? வேலை செய்ய மறுக்கும், சட்டத்தை மதிக்காத சட்டத்துறையை, பணம் படைத்தவர்களை, 'பிரமுகர்களை'. போலீஸ் என்ன செய்தது அரசு?

**பெண் உரிமை அமைப்புகள்** வளர்ந்த பிறகு, அரசாங்கமே இதற்காகத் தனி போலீஸ் படையை அறிவித்தது. அதன் பெயர் 'பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் குழு (சி.ஏ.டபிள் யூ.சி) என்பது. இதுவாவது நமக்கு ஏதும் செய்யாதா என்று ஏங்கி ஏராளமான பெண்கள் வருகிறார்கள். பாவம், இவர்களுக்கு ஒப்புக்கு அரசு நடத்தும் நாடகம் தெரியாது.

இந்தக் குழுவுக்கு 'முதல் தகவல் அறிக்கை (எஃப்.ஐ.ஆர்) எழுதக்கூட உரிமை கிடையாது. இந்த லட்சணத்தில் இதன் லட்சியம் சமரசம் தானாம், கையாலாகாத இந்த வெட்டி வேலைக்கு 72 பேர்; புது டில்லியில் தின்று கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் பாதிப்பேருக்கு ஆண்கள். முழுவதும் பெண்களே நிர்வாகம் செய்தால் நியாயம் கிடைக்குமோ என்று கூடச் சிலர் கற்பனை செய்கிறார்கள். பெண் போலீஸ் அதிகாரி ஒருவர் அதில் ஆண் அதிகாரி போலவே நடந்து கொண்டாராம்.

ஒருவழக்கு. ''உடனே வீடியோக் கடை திறக்க வேண்டும். உங்க அப்பனிடமிருந்து ரூ, 50,000 கொண்டு வா'' என்று ஒரு கிறுக்கன் பெண்ணைச் சித்திரவதை செய்திருக்கிறான். மனம் நொந்து போய், விசாரணைக்குழுவிடம் ஓடிவந்தாள் தனது சகோதரனுடன். பெண் அதிகாரி விசாரணையை இதோ கேளுங்கள்:

''அதிகாரி: அவங்க ஏன் உன்னை அடிச்சாங்க? நீ என்ன செஞ்சே?

பெண்: நான் ஒன்றுமே செய்யவில்லை. ராப்பகலா சித்திரவதை செய்யறாங்க.

அதிகாரி: நீ ஏதாவது செஞ்சிருப்பே. காரணமில்லாம யாராவது அடிப்பாங்களா?

பெண் (தனது சகோதரனிடம்): அவுங்க என்னோட நிலைமையைப் புரிஞ்சிக்குவாங்களான்னு சந்தேகமா இருக்குதுப்பா. நாம போகலாம் வா.

அதிகாரி (சகோதரனிடம்): பார்த்தியா! என்னதிமிருபாரு! எங்கிட்டயே இப்படி நடக்கிறவ வீட்டுலயும் இப்படித்தான் நடந்துகிட்டிருக்கணும். அதனால்தான் அவ புருஷன் அடிச்சிருக்கணும்!''



படிப்பகம்

www.padippakam.com

இது விசாரணையா? இங்கு நீதி கிடைக்குமா? இதை விசாரிப்பதற்கு யார் இருந்தால் என்ன? எல்லாப் பெரிய நகரங்களிலும் இந்தக் குழுவை அமைக்கச் சொல்லியும் நடக்கவில்லை. சென்னையில் ஒப்புக்கு (தங்கள் இஷ்டத்துக்கு) வரதட்சணை ஒழிப்புக் கமிட்டி, என்று போட்டுச் செயல்படுத்து (செயல்படுத்தாமல்) கிறார்கள்.

லஞ்சம் வாங்கிக் கொண்டு செயல்படாத, குற்றவாளிகளைத் தப்ப வைக்கும் அரசின் எந்திரமான போலீசை என்ன செய்துவிட முடியும்? அரசு, அரசாங்கம் எல்லாம் கூட்டுச்சேர்ந்து இயங்கும்போது எப்படி நீதி கிடைக்கும்?

## மதங்கள் நீதி பேசுமா?

ஒழுக்கத்துக்கே வித்து நாங்கள்தான் என்று பேசும் மதங்கள் என்ன செய்கின்றன? 'அந்த மதத்தில்தான் அது ஓட்டை; எங்கள் மதத்தில் இல்லை' என்று பீற்றிக்கொள்ளும் எல்லா இந்திய மதங்களுமே வரதட்சணைக் கொலைகள் பற்றி என்ன செய்திருக்கின்றன? அந்தக் கொலையாளிகளைத் தங்கள் மத்தியிலிருந்து நீக்குகிறார்களா?

எங்கள் மதத்தில்தான் சீர்திருத்தம் உண்டு என்று தளுக்கிக் கொள்ளும் எல்லா மதங்களிலும் வரதட்சணை வாங்குவது வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதிலும் ஆகாயத்தாமரையான மத்தியதர வர்க்கத்தில் (எல்லா மதத்திலும்) 'கௌரவமான இந்த வழக்கம்' உண்டு. ராஜீவின் ஐந்து நட்சத்திர ஆடம்பர கலாச்சாரம் பெருகிய பிறகு, எலக்டிரானிக் பொருள்கள்—(டிவி, டெக், ஃபிரிட்ஜ், வாஷிங்மெஷின், வீட்டு கம்ப்யூட்டர் பிற) மற்றும் ஆடம்பரச் சுற்றுலா விஷக்காய்ச்சல் போலக் கிடுகிடுவென பரவிவிட்டது. அத்தனைக்கும் 'முதல்போட' காசு—இருக்கவே இருக்கிறாள் 'பொண்டாட்டி'. அவளை அடித்து வீட்டுக்குத் துரத்துகிறான் கணவன். கொலைகள் அண்மைக் காலத்தில் வேகமாகப் பெருகியதற்கு இதுஒரு காரணம்.

இதுவும் சரி, உடன்கட்டைக் கொலைகளும் சரி, இரண்டுமே பெண்களை உயிரோடு கொளுத்துவதுதானே? அரசு ஏன் ஒன்றும் செய்ய முடியவில்லை? கேடுகெட்ட இக்கலாச்சார முறைகள் ஒழியவேண்டும் என்ற நோக்கம் ராஜீவ் அரசுக்கு உண்டா? மூடர்கள் நிறைந்த நிலப்பிரபுத்துவ சமூகத்தையே வெட்டி எரித்த பிரெஞ்சுப் புரட்சிபோல, சீனத்தில் சுன்யாட்சென் சாதிக்கப் போராடிய ஜனநாயக லட்சியங்கள் ராஜீவுக்கு உண்டா? பழம் மூடநம்பிக்கைகளில் அமுந்திக் கிடந்தது சீனம்; பெண்கள் வாத்து நடை நடந்தால் அழகு என்று சொல்லி பாதங்களுக்கு இரும்பு பூட்ஸ் போட்டுக் குறுக்கி வைத்தது; ஆண் சிறுவர்கள் குடுமி வைத்தார்கள்; எதிர்ப்புகள் இருந்த போதும் அவற்றை வெட்டச் சொன்னார், தூக்கியெறியச் சொன்னார்சுன்யாட்சன். புதிய சமுதாயம் படைக்கும் லட்சிய திட்டம், வேகம், சுயதியாகம், ஜனநாயக உணர்வு அவரிடம் இருந்தது. புதிய சமுதாயத்துக்குத் தேவை புதிய கலாச்சாரமுறை என்ற லட்சியம் அவரிடம் இருந்தது.



நரக வாழ்க்கையிலும் பொறுமை!
பஞ்சவர்ணம்:
பொறுமை குளுமையைத்
தரவில்லை;
நெருப்பைத்தான்
அள்ளி வீசிவிட்டது.

ராஜீவ் போன்ற பாசிஸ்டுகளிடம் சுன்யாட்சென் போன்ற ஜனநாயகவாதிகளின் பண்புகளை எதிர்பார்ப்பதுமுடியுமா? முடியவே முடியாது. சாதி, மதம் எல்லாவற்றையும் மூலதனமாக வைத்துத் தானே ஓட்டாக்கிக் கொள்கிறது ராஜீவ் கும்பல். அவற்றின் திரைமறைவில் நடக்கின்ற அனைத்து அக்கிரமங்களையும் கண்டு கொள்ளவும் செய்யாது; கண்டாலும், ஒப்புக்கு விசாரித்தாலும் நடவடிக்கை எடுக்காது. அப்படி நடவடிக்கை எடுக்கும் தார்மீக பலம் பாசிசக்கும்பலுக்கு எள்முனை அளவு கூடக் கிடையாது. ஏன்? ஜனநாயகத்துக்கு வேட்டு வைத்தால்தான் பாசிசக் கும்பலே உயிர் வாழ முடியும்.

அழுகிக் கொண்டிருக்கும் சமுதாயத்தின் பிரதிநிதிதான் ராஜீவ் ஆளும்கும்பல். இதுக்குச் சமரசச் சாமரம் வீசுவதே மற்ற ஓட்டுக் கட்சிகளின் வேலை. இவர்களா பெண் கொலைகளை நிறுத்துவார்கள்? அந்தத் தகுதி, வீரம் இவர்களுக்கு ஏது?

ஜனநாயகம் விரும்பும் 'மக்கள்' தான் சிந்திக்க வேண்டும்.

## செய்யவேண்டியது என்ன?

எங்கிருந்து சிந்திக்கத் தொடங்குவது? இனியும் பெண்ணடிமைத்தனம் ஏன்? தாலி ஏன்? சடங்குகள் ஏன்? அட, அதையெல்லாம் விடக் கேவலமானது, சந்தையில் மாட்டை விற்பது போலத் தன்னை பெற்றோர்கள் விற்கிறார்களே என்ற சிந்தனை பெண்ணுக்கும் சரி, ஆணுக்கும்சரி வரவேண்டாமா? சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்கிறார்களே(?) உமியளவு கூடப் புத்தியில்லாமல் பெற்றோர் சொல்வதற்கு பூம்பூம் மாடுபோலத் தலை ஆட்டுவதுதானா ஆணின் வேலை? தன்னைச் சிங்காரித்து வருகின்ற ஆணுக்கெல்லாம் காட்டிக் கொள்வதுதானா பெண்ணுக்கு மானம், கவுரவம்? வரதட்சணைக்கு மனிதனை விலைப்பேசுவதுதான் நாகரிகவளர்ச்சியா? குடும்பத்தில் தாலிகட்டு என்று சொல்லும் இடத்தில் நடக்கும் திருமணங்களே காலத்துக்கும் நிற்கிறது என்கிறார்களே; அடி உதை வாங்கி அடிமை போல வாழ தேவடியாள்கூட ஒப்புக்கொண்டு இருக்க மாட்டாள். இதையும் சற்று சிந்திக்க வேண்டும்.

## கொலையாளியைத் தூக்கிலேற்று!

முன்பு என்ன செய்தார்கள்? கருத்து வித்தியாசம் வந்தால், அடிமைபோல நடத்தினால் கூட அடிப்பார்கள், உதைப்பார்கள், துரத்தி விடுவார்கள். மணமுறிப்பு செய்து விடுவார்கள். அதுவே மோசமானதுதான். ஆனால் நாகரிக வளர்ச்சி அடைந்த(?!) இன்று நடப்பது என்ன? உடனே தண்டனை கொடுத்துச்தீயிட்டுப் பொசுக்குகிறார்களே, காட்டுமிராண்டித்தனம் அல்லவா? என்ன தண்டனை கொடுத்தால் தகும்? குற்றவாளிகளுக்கு 6 வருடம், 10வருடம் சிறைத் தண்டனை போதாது. மரண தண்டனைதான் சரியானதாக இருக்க முடியும்.

மரண தண்டனை என்று கொடுக்க முடியும்? கொலைகளுக்குத் தார்மீகப் பொறுப்பான மதவாதிகளையும், போலீஸ்—சட்டத்துறைப் பொறுப்பாளர்களையும், மக்கள் முன்னால் விசாரித்து கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கும் போதுதான்! ஆளுகின்ற பாசிசக் கும்பலுக்கு மரண தண்டனை கொடுத்த பிறகுதான்!

—பஷீர்

www.padippakam.com



# இவர் யாருடைய ஆளு?



'வழக்கமான பாச உணர்வு வக்கிரம்; அதை ஒட்டிய நகைச்சுவை; ரெண்டும் சேர்ந்ததுதான் பாக்கியராஜ் பாணி என்று இதை ஒதுக்கிவிடாதீர்கள்' என்று நண்பர்கள் சிலர் சொன்னார்கள். என்ன விசேஷம் என்று கேட்டேன். ஜாதிப் பிரச்சனையை இவ்வளவு துணிச்சலாக யாரும் சொல்லவில்லை என்றார்கள்.

தி.க 'உண்மை' ஏடு படித்தேன். 'இது நம்ம ஆளு'வை ஒரேயடியாகத் தாங்கியிருந்தார்கள்.

பார்ப்பன ஜாதிவெறிபிடித்த 'பிராமணர் சங்கத்' தலைவர் அறிக்கையும், அதற்கு வக்காலத்து வாங்கி எழுதிய இதயம், துக்ளக் இதழ்கள் படித்தேன்.

இப்படி வாதம், எதிர்வாதம் நடக்கிற அளவுக்குப் படத்தில் என்ன இருக்கிறது?

கதைச்சரடு மெல்லியது தான். தாயின் கண் வைத்தியத்துக்கு ரூபாய் பத்தாயிரம் சம்பாதித்து வருகிறேன் என்று கிராமத்திலிருந்து நகரம்வருகிறான் நாவிதர் மகன்; வேலை தேடி அலைகிறான்; தற்செயலாக 'அய்யர் வீட்டு அம்பி' வேடம் போடுகிறான்; முரட்டு ஐயர் வீடு சேர்கிறான்; அவரது மகள் காதலிக்கிறாள்; அவனும் காதலிக்கிறான். சோதனைகள். திருமணமும் நடக்கிறது. விஷயம் வெளியே வருகிறது. ஐயர், தன் பெண்ணோடு 'அம்பி' உடல் உறவு கொள்ளக் கூடாது என்று அடாவடி அடித்துச் சத்தியம் வாங்குகிறார். 'அம்பியை' அவள் ரகசியமாகச் சந்திக்கிறாள்; விஷயம் அறிந்து ஐயர் பெண்ணை 'பத்து' செய்து ஒதுக்கிவிடுகிறார். தான் நாவிதர் மகன் என்பதால் தானே ஐயர் தீண்டாமல் ஒதுக்குகிறார், அவருக்குப் பாடம் கற்பித்து, பெண்ணை அவரிடம் மறுபடியும் சேர்ப்பேன் என்று சபதம் போடுகிறான் 'அம்பி.' 'அம்பி'யின் தாய் தந்தை உதவியோடு அப்பெண் 'ஆபாச'க் கூத்தடித்து அவனைப் படுக்கைக்கு வரவழைக்கிறாள். முரட்டு ஐயர் தீக்குளிக்கிறார். 'அம்பி' காப்பாற்றுகிறான்; ஆவேச வசனம் பேசி இரு குடும்பங்களை ஒன்று சேர்க்கிறான்.

யதார்த்தத்தில் சமுதாயத்தில் உள்ள ஜாதிய முரண்பாட்டையோ, சண்டைகளையோ மருந்துக்குக்கூட படத்தில் காணோம்.

பாக்கியராஜ் படத்தில் காட்டியிருக்கும் சில சம்பவங்களை — ஆராய்ந்து பார்ப்போமா? சுண்டல் ஐயர் விற்பனை இடத்துக்கேற்றபடி முஸ்லீம், கிறித்தவ, இந்து வேடம் போட்டுச் சிறுவர்களை அனுப்பி ஏய்த்துப் பிழைக்கிறார்; மகளின் திருமணத்துக்காக கோயில் நகை திருடுகிறார் கோயில் குருக்கள்—அம்பலாகும் போது, காதும் காதும் வைத்தாற் போல மூடிமறைக்க வேண்டும் என்று மற்ற பார்ப்பனர்கள் கூறுவதாகக் காட்டுகிறார்; முரட்டு ஐயரின் உதவியால் முன்னேறிய பையனின் கண் முன்னாலேயே உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர் முரட்டு ஐயரை அடிக்கிறார்; அவன் ஒதுங்கிவிடுகிறான்; அழுது கொண்டிருக்கும் ஓர் ஐயர் குழந்தைக்கு ஊமைப்பெண் பால் கொடுத்துவிடுகிறாள். அதைப் பார்த்து விட்டவர்கள் அதை மறைப்பதற்காக, ஊமைப்பெண் மீது திருட்டுப் பட்டம் கட்டி விடுகிறார்கள். பாக்கியராஜ் இதை ஊர்ப் பஞ்சாயத்தில் அம்பலப்படுத்துகிறார்.

— இந்தச் சம்பவங்கள் பார்ப்பனீயம் பற்றிய விமரிசனம் என்று எழுதுகிறது 'உண்மை' ஏடு.

ஒரு ஜாதியைக் கொச்சைப் படுத்தி விட்டார் பாக்கியராஜ் என்று தாண்டிக்குதிக்கும் ஏடுகள் சொல்வதென்ன?

முரட்டு ஐயரின் தந்தை திருட்டு 'தம்' அடிப்பதாகக் காட்டுகிறார்; ஐயரின் மனைவி தன் வீட்டில் குடியிருக்கும் ஒருவாலிபனிடம் தன் மகள் சமைத்த சமையலை, நான்தான் செய்தேன் என்று விரசமாகக் குழைகிறார்; சாஸ்திரிகளின் பெண்ணோ வீட்டு முற்றத்திலேயே ஒரு வாலிபனுக்கு முத்தமழை பொழிகிறாள்; இவ்வளவும் ஒரு சமூகத்தைக் கொச்சைப் படுத்துபவை.

ஜாதிப் பிரச்சனையை மையமாக வைத்து குரு பாரதிராஜா 'வேதம் புதிது' படைத்தார். உண்மையிலேயே அது புதியவேதம் தான், பெருமைப்பட வேண்டும் ஆனால் பாக்கியராஜ் எந்த நோக்கமும் இல்லாமல் சாதாரண தனிமனிதப் பிரச்சனைகளுக்குச் சமூக காரணம் தேடுவது குறிப்பிட்ட ஜாதியைக் காயப்படுத்துகிறது.

மடிந்து கொண்டிருக்கிறது பார்ப்பனீயம். அதை அனுதாபத்தோடு சிலர் பார்க்கிறார்கள். பார்ப்பனர் அல்லாதவரே அந்தச் சிலர் என்பது முக்கியமான அம்சம். கிராமத்தில், பரம்பரையாகக் கூலி விவசாயியாகவே இருந்து மக்கி மண்ணோடு போகிறவனைப் பெரிதாகத் தெரியாது; சொத்துப் பத்து, ஆள் அம்போடு ஓகோவென்று வாழ்ந்து குடித்துக் கூத்தியாடிச் சொத்தை அழித்த ராஜா, பண்ணைப் பரம்பரை இன்று தெருவில் சீரழியும்—''அடடா, எவ்வளவு 'சீரோடு' வாழ்ந்த குடும்பம்?'' என்று பெருமை பேசுவார்கள்; 'இப்படி ஆகிவிட்டதே' என்று விசேஷ அநுதாபத்தோடு பார்ப்பார்கள். அதுபோலத்தான் பார்ப்பனர்களின் வாழ்க்கை பற்றியும் இப்படிச்சிந்திப்பது ஒரு போக்காக இருக்கிறது. பாக்கியராஜ் இதைக் குறி வைத்துத் தான் இது நம்ம ஆளு படம் எடுத்திருக்கிறார். இதைப் புரிந்து கொள்ளாமல் 'சீர்திருத்தவாதியே வருக!' என்றுபூரித்துப்போகிறார்கள் – தி.க 'உண்மை' ஏடும் சரி, துணிச்சல்காரர் என்று வரவேற்பவர்களும் சரி.

www.padippakam.com

வேலை கிடைக்காத பட்ட தாரி ஜாதிமாறாட்டம் செய் கிறானா? பார்ப்பானாக மாறி னால் வேலை கிடைத்துவிடும் என்று இல்லாதவிஷயத்தை அல்ல வா சொல்கிறார்? (துக்ளக்—இட ஒதுக்கீட்டைச் சந்தடி சாக்கில் தாக்குகிறது.)

—சுருக்கமாக, நகைச்சுவை யோடு நின்று கொள், சீரியசான—பிரச்சனையான — விஷயங்கள் உங்களுக்கு வேண்டாம்' என்று ஓதுகின்றன இந்த ஏடுகள்.

உண்மையிலேயே ஜாதியப் போராட்டங்களைக் காட்டி ஒரு வர் படமெடுத்திருந்தால், ஜாதீய முரண்பாடுகளை எல்லாம் புட்டுப் புட்டுக் காட்டியிருந்தால் இந்த ஏடுகளோ, பார்ப்பன வெறியர் களோ சும்மாயிருப்பார்களா? பாக்கியராஜுக்கு அந்த அக்கறை எதுவுமே கிடையாது. அந்த நோக்கத்தோடு இந்தப் படத்தை எடுக்கவும் இல்லை. கல்லை எடுப் பதுபோல பாவனை செய்தாலே, காலே அறுந்து விட்டதுபோல குரைத்துக் கொண்டு ஓடுமே அதைப்போல ஓலமிடுகின்றன இந்த ஏடுகள்.

'உண்மை ஏட்டுக்கும் இது உறைக்கவில்லை. இட ஒதுக்கீடு எதிர்ப்பு என்று வரும்போது பார்ப்பனீயத்தின் எதிர்ப்பு ஏன் என்பது கறாராக, நன்றாகவே விளங்குகிறது; ஆனால் கலாச் சாரம் என்று வரும்போது அதே பார்ப்பனீயத்தில் ஏதோ புனிதம் இருப்பதுபோல அதற்கு அனுதாபம் காட்டுகிறார்களே அது ஏன்? இது பார்ப்பனரல்லாத பிற மேல் ஜாதி மத்தியதர வர்க்கத்தின் இன்றைய ஊசலாட்ட நிலைபாடு. இதை ஆதரிக்கிறதா 'உண்மை'?

அஸ்ஸாம் முதல் அமைச்சர் மகந்தா பார்ப்பனப் பெண்ணைத் திருமணம் செய்தார் என்றதுமே, அதுவரை உத்தமர்—இனிமேல் சொல்ல முடியாது என்பதுபோல பார்ப்பன ஆதிக்கம் கூடிவிடும் என்று எழுதியது 'உண்மை'. இப் போது பாக்கியராஜ் பார்ப்பனப் பெண்ணை மணப்பதாகக் காட்டு வதை 'ஆகா' என்று உச்சி குளிரப் புகழுகிறது; மக்களின் ஆதரவு பாக்கியராஜுக்கு இருப்ப தால், பாக்கியராஜின் படம் வெற்றி என்றும், மக்கள் சக்தி ஜெயித்து விட்டது என்றும் எழுது கிறது.

பாக்கியராஜ் செய்துள்ள மோசடிகளை நியாயமாகச்சுட்டிக் காட்டுபவர் எவ்வளவோ கேள்வி களை எழுப்பமுடியும்.

—முதலும் அடிப்படையுமான ஓட்டை— முரட்டு ஐயர்பாத்திரம். கட்டுப் பெட்டிச் சம்பிரதாயங் களைத் தூக்கி வைத்துக் கொண் டாடும் எந்த ஐயராவது ஜன நாயக ரீதியில் வீட்டில் நடந்து கொள்கிறார்களா?

—ஐயரின் நேரெதிரே வந்து வாதிடுகிற நாவிதத் தம்பதி னயிரைக் கேலிக்குரிய பாத்திரங் களாக ஆக்கியிருக்கிறார் பாக்கிய ராஜ். குமரிமுத்து, மனோரமா நகைச்சுவை ஜோடியைப்போட்டி ருப்பது திட்டமிட்டுச் செய்தது தானே?

—'அம்பி' அம்பலப்படுகிறார். 'ஊரே குமுறுகிறது' என்று ஐயர் வசனம் பேசுகிறார். இதைக் கண்டும் பாக்கியராஜ், பார்ப்பன வெறியர்கள் சும்மா இருப்பதாகக் காட்டுவது வேடிக்கையாக இருக் கிறது. சாணக்கிய பரம்பரை என்ன செய்திருக்கும்? மற்ற மேல் ஜாதிக்காரர்களோடு சேர்ந்து கொண்டு நாவிதரைப் பழிவாங்கி யிருக்கும். பாக்கியராஜ் ஏன் இதைக் காட்டவில்லை?

—நாவிதர் மகன் பட்டணம் வருவது, தற்செயலாக ஐயர் வேஷம் போடுவது; நடிப்பது பொருந்தாக் கற்பனை. இதற்கும் அடுத்த படியாக பிரச்சனை முற்றிய பிறகும் உள்ளூர் சேரி யிலேயே குடியிருக்கிறாராம். ஊர்ப்பஞ்சாயத்தைக் கையில் வைத்துள்ள ஐயர் சேரியைக் வெட்டித் துண்டு போட்டிருப்பார். ஏன் அப்படி பாக்கியராஜ் காட்ட வில்லை?

—கடைசி காட்சியில், இரு குடும்பமும் ஒன்றாக குரூப் போட்டோ எடுக்கிறார்கள். ஐய ருக்கு நிகராக நாவிதர் உட்காரத் தயங்குகிறார். ஐயர் உட்காரச் சொல்கிறார். உடனே கால்மேல் கால்போட்டு நாவிதர் உட்காரு கிறார். உடனே அவர் மகன் 'அம்பி', 'உன் படிப்பு என்ன? அவர் படிப்பு என்ன? உன் தகுதி என்ன, அவர் தகுதி என்ன?' என்ற கேள்வியாலேயே அப்பனை அவமானப்படுத்துகிறான், காலைக் கீழே போடச் சொல்லுகிறான் பார்ப்பனர் அல்லாதவர்க்கு தாழ்வுமனப்பான்மை இருக்கிறது. ஆனால் சமமாக இடம் கொடுத் தால் தலைக்குமேல் ஏறிவிடுவார் கள் என்ற எரிச்சல் பாக்கிய ராஜுக்கு இருக்கிறது. அது ஏன்?

—பார்ப்பனீயத்தை விமரிசிக் கும் துணிச்சல் பாக்கியராஜுக்குக் கிடையாது. படத்தின் கடைசியில் அவர் சொல்கிறார். ''வேதத் திலே ஜாதி கிடையாது. இடையில் வந்தவர்கள் யாரோ (?) சுயநலத் திற்காகச் சாதியைச் சேர்த்துவிட் டார்கள்.'' பாக்யராஜ் இதை நிரூ பிப்பாரா? அல்லது ஒப்புக்குச் சப்பாணி டைரக்டர் 'சாணக் கியர்' பாலகுமாரன் நிரூபிப்பாரா? இந்துமதம் என்பதே பாப்பனீய, வருணாசிரம மதம்தான். இது பல முறை ஆணி அடிப்பதுபோல அறையப்பட்ட உண்மை. இதில் பித்தலாட்டம் செய்வதற்கு என்ன காரணம்? இது இவர்கள் கருத் தல்ல. சங்கரச்சாரி பகவத் பாத வர் இந்து மதத்தில் ஜாதிபேதம் தொடருவதை மறைப்பதற்காகக் கட்டியுள்ள புதிய பிரச்சாரம் தான் இது.

– எல்லாவற்றுக்கும் மேலாக, இன்று சினிமாவிலும் வாழ்க்கை யிலும் விஷமாகப் பெருகியுள்ள பொறுக்கி வர்க்க கலாச்சாரம் படம் முழுவதும் மண்டிக்கிடக் கிறது. 'ஏதோ பிராமணப் பொண்ணுண்ணா கொஞ்சம் தள தளன்னு இருப்பா' என்று மனைவி பற்றி கணவனே (கவனிக்கவும்) வசனம் பேசுவது; முன்பு முருங்கைக்காய், இப்போது மாடு- வடை என்று வசனங்கள்; ஊர் சுற்றும் விடலைகள் மேயும்போது பெண்களை அடையாளம் வைக் கும் ஆபாசச் சொல்லாக 'இது நம்ம ஆளு!' என்ற சொல் பழகி யிருக்கிறது. இது பாக்கியராஜின் திட்டமிட்டவேலை. 13 படங் களாக அவர் செய்து வருவது இதைத்தானே!

இத்தனை கேள்விகளின் சாரமும் என்ன? ஜாதிப்பிரச்சனை என்பது பாக்கியராஜுக்கு பால் வக்கிரத்தைப் புட்டுவைக்க ஒரு கருவி அவ்வளவுதான். பார்ப்பனீ யத்துக்கு ஆப்பு அடிக்கும் துணிச் சலோ, சமூக அக்கறையோ, தார்மீக ஆவேசமோ அவருக்குக் கிடையாது.

பால் வக்கிரத்தை பாக்கிய ராஜ் கலப்பதை ஏற்காவிட்டாலும் 'படத்தின் மய்யமான கருத்தாக சீர்திருத்தத்தைத்தான் பார்க்க வேண்டும்' என்று பாராட்டும் 'உண்மை'யான போலிப்பகுத் தறிவுப் பாசறைகளே பதில் சொல்லுங்கள்! கடந்த 26.8.88 பாக்யா ஏடுகேள்வி—பதில் பகுதி யில் பாக்கியராஜின் வாக்குமூலம் இதோ: ''சுத்தமான பிராமணி யத்தையும், பிராம்மணனையும் கேலி செய்கிற நோக்கத்துடன் நான் படமெடுக்கவில்லை, துண்டு போட்டுத் தாண்டறேன்....'' நமது ஒரே ஒரு கேள்வி: சுத்த மான பிராமணியம் ஜாதிகளுக்கு எதிரியா? தி.க. இந்தக் கருத் துக்கு மாறிவிட்டதா?

சுத்தமான பார்ப்பனீயத்தை (அது என்ன அக்மார்க் முத் திரையா) வாழ்த்துவதுதான், மடிந்துக் கொண்டிருக்கும் பார்ப் பனீயத்தை அனுதாபத்தோடு பார்ப்பதுதான் பாக்கியராஜின் கருத்து. இவர் யாருடைய ஆள் என்பதை, மக்களே, கண்டு கொள்க!

● குப்பண்ணன்

www.padippakam.com

சிறுகதை

# எறும்புகள்

இரா. பாரதிநாதன்

''ஏய்யா! காலமெல்லாம் நாங்க என்ன
புள்ளையார் எறும்பாவே இருப்போம்னு நெனச்சீங்களா.
இன்னிக்கி செவ்வெறும்பா மாறிட்டோம்.
ஆனை பலம் இருக்குன்னு
அட்டுழியமா பண்றிங்க.
இப்பப் பாருங்கடா எங்க பலத்தை...''

மப்பும் மந்தாரமுமாய் இருந்தது வானம். இரவிடம் வெற்றி பெற்ற காலை நேரச் சூரியனை, மேகங்கள் கைது செய்துமறைத்து வைத்திருந்தன. ராத்திரி பெய்த தூறலில் தாவரங்கள் தலை முழுகியிருந்தன. நீண்ட வறட்சியில் காய்ந்து போயிருந்த பூமி தாகம் தீராமல் உஷ்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. 'சூரியன் உதிக்காவிட்டால் என்ன? எங்களுக்கு வேலையிருக்கிறது!' என்பதைப்போல பறவைகள் இரை தேடக் கிளம்பி விட்டிருந்தன.

பனை மரம் ஏறினால் வழுக்குமே, என்ற எண்ணத்தில் மரம் ஏறும் தொழிலாளிகள் வெய்யிலை எதிர்நோக்கி அவரவர் குடிசை வாசலில் குந்தியிருந்தனர். விறகுகள் நனைந்து விட்டதால் எதை வைத்து வெல்லம் காய்ச்சுவது? என்ற கவலையில் பெண்கள் வீட்டு வேலையை சலிப்புடன் செய்துக் கொண்டிருந்தனர். ''இந்தப் பாழாப்போன மழ நல்லாத்தான் பேஞ்சு தொலைஞ்சுதா?'' என்று ஒரு சிலர் மனதுக்குள் சாபமிட்டனர்.

கிராமத்து டீக்கடையில் இருந்த மரம் ஏறுவோரில் ஒரு சிலர் இந்த வருடம் பதநீர் விளைச்சல் குறைந்து போயிருந்ததை மற்றவர்களிடம் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். கொஞ்ச நேரத்தில்கதிரவன் மெதுவாக எட்டிப் பார்க்க, அல்லைக் கயிறு, ஏணி, இடுப்பில் கட்டியிருந்த அரிவாள் பெட்டி, சுண்ணாம்பு டப்பா ஆகியவற்றுடன் பீடி இழுத்தபடி மரங்கள் அருகே சென்றனர்.

''எலே... மாணிக்கா மரங் காஞ்சிப் போச்சிடா, சல்தியா கத்தித் தீட்டிக்கிட்டு பொறப்படு...'' மாணிக்கத்தின் தந்தை அவனை அவசரப்படுத்தினார்.

'ஏப்பா! சும்மா தொறத்துற, அரக்க பரக்க வேல செஞ்சி என்னத்த கண்டோம்!'' சற்றே எரிச்சலுடன் மாணிக்கம் பதிலுரைத்தான்.

''அட அதுக்கில்லடா. பொழுதிறக்க ஏறி முடிச்சுட்டா பரவால்லன்னு சொல்ல வந்தேன்'' பெரியவர் முனகினார்.

அநேகமாக எல்லோரும் பொட்டிக் கட்டி ஏறிக் கொண்டிருந்தனர். அந்தப் பனங்காட்டில் நூற்றுக் கணக்கில் மரங்கள் குழுமியிருந்தன. இந்த தொழிலாளர்கள் குத்தகை முறையில் தொழில் செய்து கொண்டிருந்தனர். ஒரு நபர்க்கு ஏறத்தாழ நாற்பது மரங்கள் ஏறுவதற்குக் கிடைக்கும். ஒரு நாளைக்கு இரண்டு முறை காலையிலும், மாலையிலும் மரம் ஏற வேண்டும். அப்போதுதான் பதநீர் துளிர்க்கும். உயர்ந்து நின்றிருக்கும் பனை மரங்களை எண்பது முறை ஏறியிறங்க அவர்கள் படும்பாடு இருக்கிறதே, அப்பப்பா.

ஒரு மார்ப் பொழுதுக்கு சூரியன் மேலேறி வந்து விட்டது. வேர்த்து விறுவிறுக்க ஏறிக் கொண்டிருந்த முனியன் அவனுடைய தேவைக்கென்று இரண்டு மரத்தில் கள் போட்டிருந்தான். ஒன்றில் ஏறி பனங்கறுக்கில் வசமாக உட்கார்ந்து ஒரு முட்டியிலிருந்த கள்ளை மெதுவாக ஊதி முட்டினான்.

இள வெயிலுக்கு ஏற்றாற் போல போதை ''ஜிவ்''வென்று ஏறியது. உற்சாகமாய் பாடினான்...

தண்ணிக்குப் போ மகளே!
தலகுனிஞ்சு வா மகளே!
நாட்டாமைக் காரணக்
கண்டா
டக்கு முக்கு டக்குத் தாளம்
நீயும்— முகங் கொடுத்து
பேசாதேடி
டக்கு முக்கு டக்குத் தாளம்...

பக்கத்தில் ஏறிக் கொண்டிருந்த மாணிக்கம், பாட்டைக் காது கொடுத்துக் கேட்டு விட்டுச் சொன்னான், ''ஏண்ணே! சுதி ஏத்திகிட்டியா? இப்படி சத்தம் போட்டு பாடிக்கிட்டிரு. போலீசுக்காரன் கள்ளு கேசுல உள்ளப் புடிச்சிப் போடப் போறான் பாரு.''

''தம்பி. கள்ளுஞ் சாராயமும் கலந்தடிச்சா கலெக்டரும் மசுருக்குச் சமானம். என்ன யாரும் அசைக்க முடியாது'' முனியன் குஷியாப் பேசினான்.

தனக்குள் சிரித்துக் கொண்ட மாணிக்கத்தை, முனியன் புதிராகப் பார்த்தான். ''ஏம்ப்பா, சிரிக்கறே?'' என்று கேட்டான்.

''இல்ல... அன்னிக்குகரண்டுகாரன் காக்கிச் சட்டையைப் பார்த்துப்புட்டு கலால் போலீசுன்னு நெனச்சுகிட்டு நீ ஓடுன ஓட்டத்தை பார்த்து மனசுல நெனச்சி சிரிச்சேன்'' என்றான் மாணிக்கம்.

முனியனுக்கும் அதைநினைத்தால் வெட்கமாகத்தான் இருந்தது. ஆனாலும், போலீஸ் பிடித்தால் பொழப்பு கெட்டுடுமே என்ற பயம். காக்கி உடையைக் கண்டாலே அவனுக்கு ஓட்டம் வந்து விடும், அவனுக்கு மட்டுமல்ல மரமேறிகள் பெரும்பாலோனோர் இதைபோல்தான்.

''ஏண்ணே! போன வர்சம் இப்படி கள்ளுக் குடிச்சித்தானே கீழே வுழுந்தே. இப்ப திருப்பியும் குடிக்கறியே'' என்று அதட்டலாய் கேட்டான் மாணிக்கம்.

இருவரும் அவரவர் மரங்களிலிருந்து கீழே இறங்கி அருகருகே நின்று பேசிக் கொண்டே ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

''நான் என்ன தம்பி செய்யட்டும். எனக்குத்தான் மூல நோவுன்னு உனக்குத்தான் தெரியுமே! போதை ஏறினாத்



படிப்பகம்

www.padippakam.com

தான் கொஞ்சம் வலிய மறத்து இருக்க முடியுது'' சோகம் தோய்ந்த குரலில் சொன்ன முனியனைப் பார்த்து மாணிக்கத்துக்கு பரிதாபமாய் இருந்தது. கனத்த இதயத்துடன் வேறு மரம் ஏறப்போன மாணிக்கம் மரத்தை பார்த்தபடி சற்று நேரம் நிற்க,

''என்ன தம்பி! நின்னுட்டே?'' முனியன் கேட்டதை தொடர்ந்து ''இங்கே வந்துப் பாருண்ணே. வரிசை, வருசையா எறும்பு மரத்து உச்சிக்குப்போய் தெலுவு (பதநீர்) குடிக்கிறத'' கூறினான் மாணிக்கம்

கிட்டே போய் பார்த்தபோது கோடு கிழித்ததுபோல் பாதை அமைத்துக் கொண்டு எறும்புகள் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தன!

''அட! புள்ளையார் எறும்பு! அது ஒண்ணும் பண்ணாது! என்னா சுறுசுறுப்பு பார்த்தியா தம்பி' என்று கேட்டான் முனியன்.

''சுறுசுறுப்பு இருந்து என்னண்ணே செய்யுறது! இந்தப் புள்ளையார் எறும்பு யார் மெதிச்சாலும் திருப்பிக் கடிக்காமல் சொரணை கெட்டுப் போயுள்ள இருக்கு'' என்றான் அர்த்த புஷ்டியுடன் மாணிக்கம். அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அடுத்த மரம் ஏறப் போய் விட்டான் முனியன்.

தூரத்தே முனியனின் மனைவி எட்டு மாத கர்ப்பிணியாய் ஒரு பானையைத் தூக்கிக் கொண்டு வந்துக் கொண்டிருந்தாள்.

''ஏ, புள்ள தெலுவெல்லாம் வித்துப் போச்சா?'' என்று கேட்டான் முனியன்.

''வித்துப் போச்சு மச்சான். காசுதான் கம்மியா வந்தது'' என்றாள் முனியனின் மனைவி.

''ஏம் புள்ள!''

''இன்னிக்கி வாரக் கட்சி நாளுல்ல. ஜனங்ககிட்ட காசு எப்படியிருக்கும்? நாளைக்குத் தான் தறிக்காரங்க கூலி வாங்கு வாங்க.''



என்றபடியே வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். முனியன் தினமும் காய்ச்சும் பனை வெல்லத்தை வீட்டில் அடுக்கி வைப்பான். ஏனெனில் கூட்டுறவு சங்க ஆட்கள் வாரத்துக்கு ஒரு முறைதான் வருவார்கள். அதுவரை சில்லறை செலவுகளுக்காக பக்கத்து நகருக்கு பதநீர் ஒரு பானை விற்று வருவாள் முனியனின் மனைவி. முனியனுக்கு நான்கு குழந்தைகள். இவன் வருமானத்தில் குடும்பம் ஓட வேண்டும் இவனுக்கும் இந்த வேலை ஆறு மாதம்தான். ஏனெனில் அதுவரைதான் பதநீர் ஊறும். முன்பெல்லாம் கள்ளுக் கடை இருந்தது. தென்னங்கள் இறக்க மீதி நாட்களில்போவான். இப்போதுதான் 'தீவிரமாய்' மதுவிலக்கு அமுல் ஆகிக் கொண்டிருக்கிறதே!

பதினொரு மணி வாக்கில் எல்லோரும் மரம் ஏறி முடிந்து விட்டு பழையச் சோற்றைத் தின்று கொண்டிருந்தார்கள். அப்போது சோங்கிப்போன நடையுடன் வந்து கொண்டிருந்தான் வேலு!

''என்னா! வேலு! போலீசு ஸ்டேஷன்ல என்ன சொன்னாங்க'' மாணிக்கம் கேட்க மற்றவர்கள் பதிலுக்கு காதுகளை தீட்டிக் கொண்டார்கள்.

''இந்த வர்சம் உள்ளூர் ஸ்டேசனுக்கு ரெண்டு குண்டு வெல்லமும், இருவது ரூபாவும் ஒவ்வொருத்தரும் குடுத்துடணுமாம் எஸ்.ஐ கறாரா சொல்லிப் புட்டாரு.''

''போன வர்சம் ஒரு குண்டும் பத்து ரூபாவும்தான குடுத்தம். இப்ப என்ன சேத்திக் கேட்குறாங்க?''

''வெலவாசி ஏறிப் போச்சாமுல்ல''

''அதுக்கு கவர்மெண்ட்ல சம்பளம் கூட்டிக் கேட்க வேண்டியதுதானே. நாமதான் இளிச்சவாயனுங்களா?''

''எல... மாணிக்கம்போலீசுக்காரன் காதுல கேட்டா கள்ளுக் கேசுல உள்ளாரத் தள்ளிப்புடுவான்!''

''எதுக்குத் தள்ளுவான். நானென்னா கள்ளா போட்ருக்கேன்''

''ஆமா! கள்ளுப் போட்டாத்தான் புடிக்கிறானுங்களா? அவனுங்கதான் கள்ளு மரத்துக்கு மாமூல் வாங்கிட்டு உட்டுடறானுங்களே! நம்ம மாதிரி சுண்ணாம்புத் தெலுவு ஏர்றவங்களத்தானேபுடிக்கிறான்!''

''எத்தனை நாளைக்கி இவனுங்களுக்கு தண்டம் கட்றது இந்த வர்சம் கொடுக்காமஇருந்தா என்ன?



படிப்பகம்

"அவனுங்க நாகப் பாம்புங்க மாதிரிப்பா... மனசுல வெச்சுருந்து பழி வாங்கிடுவானுங்க"

"எத்தனை பேர பழி வாங்கிடுவான்! பாப்பமே அதையுந்தான்" மாணிக்கம் இறுதியாக ஆவேசப்பட்டான்.

அவன் சொல்வது மற்றவர்களுக்குப் பிடித்து இருந்தாலும் அதற்கு முன் நிற்க எல்லோருமே தயங்கினர். ஒரு முடிவில்லாமல் எல்லோரும் கலைந்தனர்.

"மாணிக்கம் வா தம்பி! டீக்கடைக்குப் போலாம்" முனியன் கூப்பிட மாணிக்கம் புறப்பட்டான்.

"ஏண்ணே! இந்தப் போலீசு நாய்ங்கள என்ன செய்றது? இப்படியே வுட்டா நம்ம வருமானத்துல பாதிய குடுங்கடான்னு நாளைக்குக் கேப்பானுங்களே!"

"அவனுங்களயாருப்பா முன் நின்னு கேக்குறது! பூனைக்கு மணிக் கட்ட எல்லாப் பயலுமுல்ல அஞ்சி சாவுறானுங்க."

ஆமாம்! பூனைக்கு யார் மணிகட்டுவது? மாணிக்கம் யோசித்தான். சிந்தித்துக் கொண்டே வந்ததில் ஒரு எறும்புச் சாரியை மிதித்து விட்டான். ஒரு எறும்பு "நறுக்"கென்று கடிக்க சுய நினைவுக்கு வந்தான்.

"பாருண்ணே! இந்த செவ்வெறும்புக்கு இருக்குற சொரணைய..." என்றபடி எறும்புச் சாரி எங்கே போகிறதென்று பார்த்தான். ஒரு முள் புதருக்குள் சென்றது. புதருக்குள் எட்டிப் பார்க்க...

"மாணிக்கம்! அந்தப்பொதாருப் பக்கம் போகாதப்பா. அங்க நீட்டமா ஒரு பாம்பு இருக்குது" என்று எச்சரித்தான் முனியன்.

"அதத்தாண்ணே, ரெண்டு நாளைக்கி முந்தி நான் அடிச்சேன். ஆனா, தப்பிப் போயிடுச்சி" என்றான் மாணிக்கம்.

"பாம்பையெல்லாம் அடிச்சி வுடக் கூடாது! பழி வாங்கிரும்" முனியன் பயமுறுத்தினான். திடீரென்று மாணிக்கம் கூச்சலிட்டான்.

"அண்ணே, அண்ணே! பாம்பு உள்ளப் படுத்திருக்குதண்ணே!"

"இரு வர்றன்! இன்னிக்கு அதை ஒழிச்சிடலாம்" அவசர அவசரமாய் முனியன் தூரத்தில் கிடந்த கற்களை எடுத்து வந்து புதருக்குள் வீசினான். கற்கள் பாம்பின்மீது "சத், சத்"தென்று விழுந்தன! ஆனால் பாம்பு துள்ளக் காணோம், துடிக்கக் காணோம். ஆச்சரியமாய் பார்த்த மாணிக்கம் வீட்டுக்கு ஓடிப்போய் தடியொன்றை எடுத்து வந்து அதன் கூர்முனையில் பாம்பை குத்தினான். பாம்பு அசையக் காணோம். செத்து விட்டதோ? சந்தேகத்துடன் பாம்பை தடியில் குத்தி வெளியில் எடுத்துப் போட "கச முச"வென்று எறும்பு ஏறிக் கிடந்த பாம்பு மண்டையைப் போட்டிருந்தது.

"எப்படிண்ணே! செத்துருக்கும்! எங்கிட்ட அடி வாங்கி ஓடிடிச்சே" ஆச்சர்யமாய் கேட்டான்.

"நீ அடிச்சதுல காயம் பட்டிருக்கும். பாம்புக்கு காயம் ஆனா எறும்புங்க சும்மா விடாது. அந்தக் காயத்துல கூட்டங் கூட்டமாய் போயிக்கடிக்கும் சாகற வரைக்கும் விடாது!" என்று விரிவாகச் சொன்னான் முனியன்.

"இந்தத் துளியூண்டு எறும்பப் பாருய்யா, என்னா வேலை பண்ணுது" மாணிக்கம் அதிசயித்தான்.

"என்னத் தம்பி எறும்ப சாதாரணமாய் நெனச்சுட்ட, யானை காதுல பூந்தா ஆனையே அவுட்டுல்ல' என்ற முனியன் "சரி வாப்போலாம்" என்று புறப்பட்டான்.

மறுநாள் வழக்கம்போல எல்லோரும் மரம் ஏறிக் கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு வெள்ளை வண்டி வந்து நின்றது. திபு திபுவென்று நான்கைந்து போலீஸ்காரர்கள் இறங்கி ஓடி வந்தனர். என்ன காரணத்தாலோ மரமேறிகள் யாரும் ஓடவில்லை.

"டேய் எல்லாரும் எறங்கி வாங்கடா." ஒரு போலீஸ்காரன் அதட்டலாய் எல்லோரையும் கூப்பிட்டான். தொழிலாளிகள் பயத்தோடு இறங்கிவந்தனர்.

"இந்த வர்சம் எங்க கலால் போலீசுக்கு மூணு குண்டு வெல்லமும் முப்பது ரூபாயும் குடுத்துடணும்" ஒரு போலீஸ்காரன் உத்தரவாய் சொன்னான். மரமேறிகள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். எல்லோருடைய மனதிலும் எரிச்சல் கூடியிருந்தது.

"என்னங்கடா! நா சொல்றது" மீண்டும் அந்தப் போலீஸ்காரன் அதட்டினான்.

"ஏங்க! உள்ளூர் ஸ்டேசன்லேயும் ரெண்டு குண்டும் இருவது ரூபாயும் கேட்கிறாங்க. இதெப்படிங்க முடியும்" மாணிக்கம் துணிச்சலாய் முன் வந்துக் கேட்டான்.

"யார்ராவன் எதிர்த்துப் பேசறது?" போலீஸ்காரன் முறைத்தான். "அந்தக் கதையெல்லாம் எங்களுக்குத் தெரியாது! நாங்க கேட்டத நீங்க குடுத்துடணும்" என்று உறுமினான்.

"கலால் போலீசுன்னா கள்ளு கேசுதானப் புடிக்கணும் எங்கள எதுக்கு காசு கேட்குறீங்க?" முனியன் இப்போதுகேட்டான்.

"எவண்டாது சட்டம் பேசறது. முன்னாடி வாடா!" ஒரு போலீஸ்காரன் குரல் வந்த திசையில் எகிறினான்.

"அவன் கேட்டதுல என்ன சார் தப்பு! நீங்க பாட்டுக்கு வந்து அதக் குடு, இதக் குடுன்னாளெங்க போறது" மாணிக்கம் சூடாகப் பேசினான்.

"எலே... சாணாப் பயலே கொளுப்பாடா" ஒரு போலீஸ்காரன் மாணிக்கத்தின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். இதை எதிர்பார்க்காதஅனைவரும் திடுக்கிட்டுப் போயினர்.

"யோவ் எதுக்குய்யா அடிச்சே" மாணிக்கம் கேட்க, அடுத்த நிமிடம் இன்னொரு போலீஸ்காரன் அவனை எட்டி உதைத்தான். எல்லா போலீஸ்காரர்களும் சரமாரியாக அடித்தார்கள். மாணிக்கத்தின் அலறல் அந்த பனங்காடு முழுக்க எதிரொலித்தது.

மரம் ஏறுபவர்கள் அனைவர் இதயத்திலும் அந்த அலறல்ஆணி கொண்டு அறைந்தது. ஆனால், அடிப்பவன் போலீஸ்காரனாயிற்றே.

"டேய் இவன தூக்குங்கடா, கொண்டு போயி தோல உறிச்சி உப்புக் கண்டம் போட்டுடலாம்" போலீஸ்காரர்கள் மாணிக்கத்தை இழுத்துக் கொண்டு வெள்ளை வண்டியை நோக்கிப் போனார்கள். அடுத்த நிமிடம் எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு கல் போலீஸ் வேனின் முன்பக்க கண்ணாடியை சிலீரென்று உடைத்தது. போலீஸ்காரர்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

மரமேறிகள் அனைவர் கைகளிலும் பெரிது பெரிதாய் கற்கள் காட்சி தந்தன!

மாணிக்கத்தைப் பிடித்திருந்த பிடி மெதுவாய் தளர்ந்தது. முனியன் கண்கள் சிவக்கப் பேசினான்...

"ஏய்யா! காலமெல்லாம் நாங்க என்ன புள்ளையார் எறும்பாவே இருப்போம்னு நெனச்சீங்களா. இன்னிக்கி செவ்வெறும்பா மாறிட்டோம். ஆனை பலம் இருக்குன்னு அட்டூழியமா பண்றீங்க. இப்பப் பாருங்கடா எங்க பலத்தை..."

www.padippakam.com



காதல், கற்பழிப்பு, கொலை, துப்பறியும் கதைகளுக்கிடையே ஆங்காங்கே ஒரு நீதி போதனைக் கதை எல்லா வார இதழ்களிலும் வெளிவந்துவிடுகிறது. இத்தகைய நீதி போதனைக் கதைகள்தான் அன்றைய நிலவரப்படி சமூகத்தில் தோன்றும் பிரச்சினைகளுக்குத் 'தீர்வு' சொல்பவை. வரதட்சிணைப் பிரச்சினை, கலப்புத் திருமணம், கணவன்—மனைவி மோதல், மாமியார்—மருமகள் சண்டையிலிருந்து தவணை முறையில் டெலிவிஷன் வாங்குவதுவரை அனைத்தும் இத்தகைய சிறுகதைகளில் அலசப்படுகின்றன.

2-10-88 தேதியிட்ட ஆனந்த விகடனில் 'மாற்றங்கள்' என்று ஒரு சிறுகதை.

இருபது வருடம் சர்வீஸ் ஆன தாமோதரன் ஒரு தாசில்தார் ஆபீஸ் ஹெட்கிளார்க். வேலையில் கில்லாடி! பழகுவதற்கு இனியவர். பணத்தாசை இல்லாதவர். மனச்சாட்சிக்கு மதிப்பு கொடுப்பவர்.

அப்பேர்ப்பட்ட தாமோதரனின் மனைவி அவரிடம் ஒருநாள் ஒரு கோரிக்கை வைத்தாள்.

"நம்ம மகன் எழுதியிருக்கிற பிளஸ்-டு பரீட்சை பேப்பர்ங்க திருநெல்வேலிக்குத்தான் திருத்த வந்திருக்காம்... காமர்ஸ்ல மட்டும் நல்லா எழுதலயாம். திருநெல்வேலி சி இ ஓ (கல்வி அதிகாரி) உங்க ஃப்ரெண்டுதானே, போய்ப் பார்த்துச் சொல்லுங்க."

இதைக் கேட்டதும் நேர்மையாளரான தாமோதரன் வெடிக்கிறார்.

மறுநாள் தாசில்தார் ஆபீஸில் டி ஆர் ஓ இன்ஸ்பெக்ஷன். முடிந்தபின் அவருக்கு விருந்து. பின்னர் டி ஆ ஒ, தாசில்தாரிடம் ஒரு காரியம் ஆகவேண்டும் என்கிறார். தாமோதரன் மனைவி அவரிடம் கேட்ட அதே விஷயம் தான். டி ஆர் ஓ வுக்குத் தனது மகளைப் பாஸ் செய்ய வைக்க வேண்டும். தாசில்தார் தாமோதரனை அழைக்கிறார். டி ஆர் ஓ வின் மகளுக்கு சிபாரிசு செய்ய மறுநாளே திருநெல்வேலி புறப்படுகிறார் தாமோதரன்.

விஷயம் தாமோதரனின் மனைவிக்கு தெரிந்து விடுகிறது. தாமோதரனிடம் சண்டை போடுகிறாள். 'நேர்மையாளர்' பதில் சொல்கிறார்.

"இதப்பாரு லெட்சுமி... டி ஆர் ஓவுக்காக நான் திருநெல்வேலி போனது மேலிடத்து உத்தரவு... என் வேலையின் ஒரு பகுதி. வாங்கற சம்பளத்துக்கு எந்த வேலையாக இருந்தாலும் செய்தாகணுமே... ஆனா. நம்ம பையனுக்காக நான் சிபாரிசுக்குப் போனா அது என்னோட தாசில்தார் ஆபீஸ் பதவியை பயன்படுத்திக்கிட்டு நான் செய்யற ஊழல்... இத்தனை வருஷ சர்வீஸ்ல எனக்குப் பழக்கமில்லாதது அது..."

இந்தப் பதிலைக் கேட்ட அவர் மனைவி வாயடைத்துப் போகிறாள்.

ஆனால் இந்த இடத்தில்தான் நாம் வாயைத் திறக்கவேண்டிவருகிறது. மண்டைக்குள் மூளை என்று சொல்லப்படும் பொருள் சிறிதளவு இருந்திருந்தாலும் "ஏன்யா... ஆபீசருக்கு கூஜா தூக்குவதும் தரகு வேலை பாக்குறதும் வாங்குற சம்பளத்துக்குச் செய்யவேண்டிய வேலையா?" என்று அவர் மனைவி கேட்டிருப்பாள். கதாசிரியர்தான் தாமோதரன் என்பதால்மனைவி இப்படிப்பட்ட 'திமிர்த்தனமான' கேள்விகளையெல்லாம் கேட்கவில்லை போலும்! அதை விட்டுத்தள்ளுவோம். விஷயத்துக்கு வருவோம்.

நாட்டில் தாமோதரன்களின் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. "ஊரைத் திருத்தமுடியாது சார். நம்ம வரைக்கும் நேர்மையா இருந்திட்டுப் போவோம்" என்பது பழைய தத்துவம்தான். "துஷ்டனைக் கண்டால் தூரவிலகு" என்பது இதற்கும் முந்தைய தத்துவம்.

இத்தகைய கண்ணியவான்கள் எங்கும் இருக்கிறார்கள். இவர்கள் லஞ்சம் வாங்கமாட்டார்கள்; பக்கத்தில் இருப்பவன் லஞ்சம் வாங்கினால் கேட்கவும் மாட்டார்கள். இவர்கள்ஒழுக்கமானவர்கள். பஸ்ஸில் தவறிக்கூட பெண்கள் மீது இடித்துவிட மாட்டார்கள். கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தால் கட்டைவிரல் நுனியில்நின்று பஸ்ஸின் கூறையைத் தொடுவார்களே தவிர, பெண்கள்மீது தங்கள் மூச்சுக்காற்றுப் படுவதற்குக்

## பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்

கூட அனுமதிக்கமாட்டார்கள்; ப
கத்திலிருப்பவன் வேண்டுமென்ே
பெண்கள்மீது மோதினாலும் இவ
கள் மூச்சு விடமாட்டார்கள்.
எறும்புக்குக்கூடத் தீங்கு நினைக்
மாட்டார்கள்; கண்ணதிரில் குத்
வெட்டு நடந்தாலும் ஏறெடுத்து
பார்க்க மாட்டார்கள்.

"நமக்கேன் ஸார் வம்பு
"துஷ்டனைக் கண்டால் து
விலகு"—சரி விலகுவோம். வில
னால் போதாது. தூர ஓடுவோ
எவ்வளவு தூரம் ஓடமுடியும்? எ
படி ஓடினாலும் பூமி உருண்ன
தான். எவ்வளவு வேகமாக ஓடு
றோமோ அவ்வளவு சீக்கிரம்மீ
டும் துஷ்டன் இருக்குமிடத்துக்
வந்தாக வேண்டும். தப்பவேமு
யாது. கூவத்தின் கரையில் வீ
கட்டிக் கொண்டு 'வீட்டைச்சுற்
தண்ணீர் தேங்காமல் பார்த்து
கொண்டால்' கொசுத் தொல்ல
யிலிருந்து விடுபட முடியுமா?

பக்கத்து நாற்காலிக்கார
லஞ்சம் வாங்கி சிக்கிக் கொள்ளு
போது 'தான் லஞ்சம் வாங்கிய
இல்லை' என்று சாட்சி சொல்
கூப்பிடுவான்; தன்மீது உர
வனை அந்தப்பெண் ஒருபிடிபிடி
கும்போது அவன் "சாரைக் கே
டுப் பாருங்க; நான் பாட்டுக்கு ஒ
பக்கமா நிக்கிறேன். என்னம்
தாறுமாறாபேசுற" என்று நற்சா
றிதழ் கேட்பான்.

இப்போது என்ன செய்வ
நீங்கள் யோக்கியர்கள்தான்; உ
தமர்தான்—ஆனால் இப்பம
பட்ட சூழ்நிலயில் என்ன செய்
போகிறீர்கள்? லஞ்சப் பேர
உத்தமன் என்று நீங்கள் சொ
னால் அவனுக்குத் துணை போ
றீர்கள் என்று பொருள். உண்
யைச் சொன்னாலோ அன்றுமு
அவனுக்கும் — அதாவது துஷ்
னுக்கும்—உங்களுக்கும் மோத
ஆரம்பம். 'தூரவிலகும்' கல
யெல்லாம் நடக்காது.

இரண்டில் ஒரு வழிதா
இருக்கிறது. டி.ஆர்.ஓ மகளு
சிபாரிசு செய்யப் போகும் வ
தாமோதரன் யோக்கியராக இ
திருக்கலாம்; ஆனால் அதற்கு
பிறகு இல்லை. தனதுபிழைப்ை
காப்பாற்றிக் கொள்ளத்தான் எ
றாலும் அதற்குப் பெயர் 'கூ
வேலை'தான். இப்படி
தொடக்கம் நடந்தபின் நீங்க
விரும்பினாலும் நீங்கள் நேர்
யாளராக இருக்க முடியாது. அ
றம் கொஞ்சம் கொஞ்சயாக
கத்தோடு ஒட்டி ஒழுக ஆரம்பி
விடுவீர்கள்.

யோக்கியர்கள் தன்னள
யோக்கியர்களாக நீடிக்கவேண்
மென்றாலும் அயோக்கியர்கள
எதிர்த்தால்தான் முடியும். இல்
யேல் தாமோதரனாகவேண்டிய
தான்!

www.padippakam.com



# எட்டிப்பாருங்கள்...!

## நேரு பரம்பரையா பிடி மந்திரி பதவி!

மர்ஸ்பான் பத்ரவலா மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்எல்ஏ. இளைஞர். திடீரென்று அவர் சற்றும் எதிர்பாராத வகையில் அவருக்கு ஒரு யோகம் அடித்தது. முதல்வர் சரத்பவார் அவரையும் ஒரு அமைச்சராகி விட்டார். அமைச்சர் பதவிக்காக அவனவன் ஆலாய்ப்பறக்கும்போதுஇவருக்கு மட்டும் பதவி தேடி வந்த காரணமென்ன? அதுதான் ருசிகரமான கதை.

பத்ரவாலா ராஜீவ் காந்தியின் சொந்தக்காரராய் இருப்பாரோ என்று ஒரு பேச்சு அடிபட்டிருக்கிறது. அடுத்த நிமிடமே அவர் அமைச்சராக்கப்பட்டு விட்டார். இந்த இன்ப அதிர்ச்சியில் நிலை குலைந்துபோன பத்ரவாலா பதவியேற்பு விழாவுக்கே வரவில்லை. போகட்டும், சட்ட சபைக் கூட்டம் தொடங்கும் நாளன்று வந்து விடுவார் என்று எதிர்பார்த்தார்கள். அவரோ ராஜீவ் காந்தியை வழியனுப்பும் கூட்டத்தோடு விமான நிலையத்துக்குப் போய் விட்டார். ராஜீவ் காந்தியின் உறவினராகத்தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் இப்போது வலுத்தது. அடுத்துமேல்சபைஉறுப்பினர்தேர்தலன்று ஓட்டுப் போட வருவார் என்று ஆவலாகக் காத்திருந்தார்கள். அவரோ வெளிநாடு போய் விட்டார். இதிலிருந்தே தெரியவில்லையா அவர் ராஜீவின் சொந்தக்காரர்தான்என்று!

எதற்கு இவ்வளவு சங்கடம்? ராஜீவையே ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டியதுதானே என்கிறீர்களா? அந்த அளவுக்கு தைரியம் இருப்பவன் காங்கிரசில் ஏன் இருக்கிறான்?

## விக்கிரமாதித்தன் நாற்காலி!

பதவிக்கு வருவதற்கு முன் கூழைக்கும்பிடு போடுவதும், பதவிக்கு வந்தபின் எகத்தாளம் செய்வதும் ஓட்டுப் பொறுக்கிகளின் குணாதிசயம். இதற்கு ''மார்க்சிஸ்டு''களும் விதிவிலக்கல்ல.

'வேலையில்லாதோருக்கு வேலை' என்று முழங்கி கேரளத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது 'மார்க்சிஸ்டு' கட்சி. ஆட்சிக்கு வந்தபின் வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கமாட்டார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். எதிர்க்கட்சிகள் இளைஞர்களைத் திரட்டி ''வேலை கொடு'' என்று போராட்டம் நடத்தினர். அதற்கு மரியாதையாக ஏதாவது பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் மந்திரி நாற்காலி, விக்கிரமாதித்தன் நாற்காலியாயிற்றே.

''வேலையில்லாத இளைஞர்கள் எதிர்க்கட்சிகள் நடத்தும் போராட்டத்தில் ஈடுபடும் நேரத்தில் தெருநாய்களைப் பிடித்து முனிசிபாலிடியில் ஒப்படைத்தால் அதிலாவது கொஞ்சம் வருமானம் வரும்'' என்று திமிராகப் பேசியிருக்கிறார் 'மார்க்சிஸ்டு' உள்ளாட்சித்துறை அமைச்சர் தங்கப்பன்; வந்தது வினை. ஆத்திரமடைந்த இளைஞர்கள் கையில் நாயுடன் கேரள சட்டசபை வாசலில் ஆர்ப்பாட்டம் நடத்தத்தொடங்கினர்.

உடனே ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்கள், நாலு கால் நாய்கள் அனைவரையும்



அடித்து வண்டியிலேற்றின இரண்டு கால் நாய்கள் (போலீசார்). ''அரிசிப்பஞ்சம் என்றால் எலிக்கறி தின்னுங்கள்'' என்றார்கள் காங்கிரசுக்காரர்கள். வேலையில்லையென்றால் ''நாய் பிடிக்கப்போ'' என்கிறார்கள் 'மார்க்சிஸ்டுகள்'. இரண்டு பேருக்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?

## ஆயகலைகள் அறுபத்தைந்து!

'ஆய கலைகள் அறுபத்தி நான்கு' என்பார்கள். அறுபத்தைந்தாவதாக ஒரு கலையை சேர்த்துக் கொள்ளுங்கள். டெல்லியில் இருக்கும் ''பிர்லா நிர்வாகக் கலைப் பயிற்சிப்பள்ளி'' புதிதாக ஒன்றைத் தனது பாடத் திட்டத்தில் சேர்த்துள்ளது. அதுதான் ''காரியம் சாதிக்கும் கலை''(THE ART OF LIAISON)

சந்தேகப்படாதீர்கள். இது உண்மைதான். ஏற்கனவே தனியார்துறை நிறுவனங்களில் லயசன் ஆபீசர், அதாவது காரியம் சாதிக்கும் அதிகாரி என்ற பெயரில் ஒருவர் உண்டு. அரசு அலுவலகங்களில் கோப்புகளை எப்படி நகர்த்துவது, எந்த மந்திரியைப் பிடித்தால் பர்மிட் வாங்கலாம் என்பது முதல் கூட்டிக் கொடுப்பதுவரை அனைத்தும் இவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணிகள்.

இதைப்போய் ஒரு பாடமாக வைப்பார்களா என்று ஆத்திரமடைந்து ஒரு நிருபர், பிர்லா பயிற்சிப் பள்ளியின் காப்பாளரிடம், ''ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்? 'லஞ்சம் கொடுப்பது எப்படி' என்று நேரடியாகப் பெயர் வைத்து விட்டுப் போங்களேன்'' என்று கேட்டிருக்கிறார். ''சேச்சே... என்ன இப்படிக் கொச்சையாகப் பேசுகிறீர்கள். ஒரு நாகரிகமான மனிதர் பிறரை வசியப்படுத்தும் தனது திறமையின் மூலம் தான் சார்ந்துள்ள கம்பெனிக்கு சில காரியங்களை சாதித்துக் கொடுக்கிறார். அந்தத் திறமையைத்தான் கலை என்கிறோம். இதைத்தான் நாங்கள் கற்றுக் கொடுக்கப் போகிறோம்...'' என்று அமைதியாகப் பதிலளித்தாராம்.

இந்த வேலையைத்தான் ''வெற்றிலைப் பெட்டி'', 'மாமா வேலை', 'தரகு வேலை' என்று நாம் 'கொச்சையாக, அநாகரிகமாக' சொல்லிக் கொண்டிருக்கிறோம் போலிருக்கிறது!



படிப்பகம்

www.padippakam.com

## சூதாடிகளின் 'தேசபக்தி'

நாடெங்கும் சூதாட்ட விடுதி கள் திறக்கப்போவதாக சென்ற ஆண்டு பாராளுமன்றத்தில் அறி விக்கப்பட்டது. வெகுவேகமாக இது நடைமுறைக்கு வந்திருக் கிறது.

''வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு பம் பாயில் எதுவும் இல்லை. எனவே சூதாட்ட விடுதி தொடங்கப் போகிறோம்'' என்று அறிவித் திருக்கிறார் காங்கிரஸ் முதலமைச் சர் சரத்பவார். இங்கிலாந்தில் நாடு முழுவதும் சூதாட்ட விடுதி நடத்தும் பீட்டர் கட்லர் என்ற முதலாளி பம்பாய்க்கு வந்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டுப் போயிருக்கிறான்.

தேர்தல் வரப்போகும் நேரத் தில் இதை அறிவித்தால் எதிர்க் கட்சிகளுக்கு கொண்டாட்டமாக போய்விடுமே என்பதால் ''இந்த சூதாட்ட விடுதிகளில் ஆரம் பத்தில் வெளிநாட்டினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்'' என்று நய வஞ்சகமாக ஒருவரியைச் சேர்த்து அறிவித்துள்ளனர்.

இங்கே சூதாட்ட விடுதி இல் லாததால் நேபாளத்தில் சென்று இந்தியர்கள் சூதாடுகின்றனர். இதனால் அந்நியச் செலாவணி இழப்பு என்று 'தேசபக்தி' பொங்க குமுறுகிறது மகாராஷ் டிரா சுற்றுலாத்துறை.

முதலில் வெளிநாட்டு சுற்று லாப் பயணிகளுக்கு என்று தொடங்கி, பின்னர் எல்லோருக் கும் என்று அறிவிக்கப்படும். சிறிது காலம் கழித்து ''சீட்டாட் டம் போன்ற சூதாட்டங்களும் விளையாட்டுகளே'' என்று அறி வித்து வளர்ச்சி நிதியம் ஒதுக்கு வதற்கு ராஜீவ் அரசு தயங்கப் போவதில்லை.

## வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!

''வட்டச் செயலாளராக நிய மித்த புரட்சித் தலைவருக்கு நன்றி'' ''வாரியத் தலைவராக நியமித்த பொன்மனச் செம்ம லுக்கு நன்றி'' என்ற சுவரொட்டி களும் பத்திரிக்கை விளம்பரங் களும் 'திராவிட' பாரம்பரியங் களுக்கேயுரிய தனிச்சிறப்புஅல்ல; மத்தியப் பிரதேச மாநிலக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இத்த கைய விளம்பரங்களால் பத்தி ரிக்கை முதலாளிகளின் பணப் பெட்டிகளை நிரப்புகிறார்கள். இந்த பத்திரிக்கை விளம்பரங் களையே கோஷ்டி மோத லுக்கான ஆயுதமாக எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்ற விஷயம்தான் சுவையானது.

20 அம்சத்திட்டம் அமுல் படுத்தப்படுவதைக் கண்காணிப் பதற்காகநியமிக்கப்பட்ட கமிட்டி யில் கிரிமினல் குற்றவாளிகள் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை முதல்வர் அர்ஜுன்சிங் வன்மையாக மறுத்திருந்தார். மறுநாளே ''நன்றி நன்றி'' என்று கொட்டை எழுத்தில் போட்டு ஒரு விளம்பரம் வெளியானது. நடுவில் இருபது அம்சத்திட்ட கமிட்டிக்கு நிய மிக்கப்பட்ட நபரின் படமும் ஒருபுறம் அர்ஜுன் சிங்கின் படமும் மறுபுறம் அர்ஜுன்சிங் கோஷ்டியைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர் ஒருவரின் படமும் வெளியாயிருந்தன. விளம்பரம் கொடுத்தது அர்ஜுன் சிங் எதிர்ப்பு கோஷ்டி. இந்த விளம்பரம் வெளியாகும் தருணத் தில் கிரிமினல் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் அந்த கமிட்டி உறுப்பினர் போலீஸ் லாக்கப்பில் இருந்தாராம். கோஷ்டி மோதல் என்றால் வேட்டியைக் கிழிப்பது மட்டும்தானா என்ன? இத்தகைய நாசூக்கான முறைகளையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.



## ஒரு பிரதமரும் ஐந்து கார்களும்

பிரதமரின் உயிரைப் பாது காப்பது நாளுக்கு நாள் கடின மாகிக் கொண்டே வருகிறது. எங்கேயாவது சந்திர மண்ட லத்திற்கு கொண்டு போய் விடுவதுதான் ஒரேவழி போலிருக் கிறது.

ஒரே மாதிரியான ஐந்து அம்பாசிடர் கார்களை ஏற்பாடு செய்து அதில் ஒன்றில் ராஜீவை ஏற்றிக் கொண்டு போகிறார்கள் பாதுகாப்பு அதிகாரிகள். பிரத மரைக் கொலை செய்ய முயலு பவர்களுக்கு அவர் எந்தக் காரில் இருக்கிறார் என்று தெரியாமல் குழப்பத்தை ஏற் படுத்துவதற்காகத்தான் இந்த ஏற்பாடு. ஆனால் ஜோர்டான் மன்னர் பல லட்ச ரூபாய் மதிப் புள்ள மெர்சிடிஸ்காரை ராஜீவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தநாளிலி ருந்து தலைவலி தொடங்கியது. ராஜீவ் அன்று முதல் அம்பாசிடர் காரில் ஏறுவதில்லை.

லட்சத் தீவுக்குப் போன போது இரண்டு லட்சம் ரூபாய் செலவில் ராஜீவ் குடித்த1 டம்ளர் பாயசமே மக்களுக்கு இன்னும் செரிக்கவில்லை. இப்போது மேலும் நான்கு கார்களை இறக்கு மதி செய்தால் அது ஆபத்து என்பதால் நான்கு கன்டெஸ்ஸா கார்களை வாங்கி மெர்சிடிஸ் போல உருமாற்றம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டு அதற்கு ஏற்பாடு நடக்கிறது.

நேருவின் குலக்கொழுந்தை ஆடு தின்னாமல் பாதுகாக்க தனி யாக அமைச்சர் போட வேண்டி யதுதான் பாக்கி!

## ஏலம் போட்டால் தேசவிரோதி

மேற்கு வங்க மாநில மக்கள் தொடர்புத்துறை அதிகாரி ஒருவர் அலுவலகத்தில் இருந்த பழைய உடைந்து போன மேசை நாற்காலி போன்றவற்றை ஏலம் போடும்போது கந்தலாகிப் போன தேசியக் கொடி ஒன்றை யும்சேர்த்து ஏலம் விட்டுவிட்டார்.

இது கல்கத்தா வழக்கறிஞர் ஒருவருக்குத் தெரிந்து போய் விட்டது. வந்தது வினை. தேசிய அவமதிப்பு குற்றம் புரிந்து விட்டாரென்று அந்த அதி காரிமீது வழக்கு தொடர்ந்து விட் டார்.

சரி கிழிந்துபோன கொடியை என்ன செய்வது? ஆறடி ஆழத் துக்கு ஒரு குழி தோண்டி அதில் கந்தல் கொடியைப் புதைத்து மூடி அந்தக் கல்லறையில் இன்ன தேதியில் புதைக்கப்பட்டது என்று பொறித்து வைக்க வேண்டுமாம். இவை அனைத்தும் பதிவு பெற்ற அரசுஅதிகாரி ஒருவ ரின் முன்னிலையில்தான் செய்யப் பட வேண்டுமாம். இதுதான் சட்டம்.

கிழிந்த கொடியை ஏலம் போட்டால் சிறை! தேசத் தையே ஏலம் போட்டால் பிரதமர் பதவி!

www.padippakam.com

# பொறுக்கி அரசியலும் கிசுகிசு பத்திரிகைகளும்

சாராய வியாபாரிகளையும் ''சாக்கனா''கடைக்காரர்களையும் போல கூட்டுச் சேர்ந்து நடத்துகிறார்கள் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும் அரசியல் கிசுகிசு பத்திரிக்கைகளும். இரண்டு பேருக்குமே சுறுசுறுப்பான வியாபாரம் கொழுத்த லாபம். காட்டமான நாட்டுச் சாராயமானால் கார வகைகள் நிறையவே விற்பனையாகும். நாக்கை அறுக்கும் காரமாக இருந்தால் வயிறுமுட்ட சாராயம் உள்ளே போகும்.

அப்படித்தான். ஆபாச, வக்கிர, பிழைப்புவாத, பொறுக்கி அரசியலை ஓட்டுக் கட்சிகள் விற்பனை செய்கின்றன. அதற்கேற்ற காரசாரமான சரக்குகளைச் சேர்த்து காகிதங்களில் நிரப்பி வாசகர் மூளையில் ஏற்றுகின்றன கிசுகிசு பத்திரிக்கைகள்.

பொறுக்கி அரசியல் வியாபாரத்தில் கருணாநிதி, ஜெயலலிதா, ஜானகி — வீரப்பன், நெடுஞ்செழியன், பண்ருட்டி, மூப்பனார், சிவாஜிகணேசன் ஆகியோர் மொத்த வியாபாரிகளாக உள்ளனர். அப்துல்சமது—லத்தீப், கலிவரதன்—செழியன், நெடுமாறன், வீரமணிபோன்றவர்கள் சில்லரை வியாபாரம் செய்கிறார்கள்.

குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, சாவி, இதயம் ஆகிய பழைய—புதியபார்ப்பனவாரஇதழ்களும் ராணி, தேவி போன்ற 'குடும்ப' பத்திரிக்கைகளும் மற்ற மசாலா வகைகளோடு கிசுகிசு அரசியலையும் கலந்து தருகின்றன. ஏறக்குறைய எல்லா தமிழ் நாளேடுகளும்செய்திகளைக் குறைத்துக் கொண்டு வதந்திகள், ஊகங்கள், ஆருடங்கள், ஓட்டுப் பொறுக்கிகளின் சவடால்—சவால் அரசியலுக்கு அதிக இடம் ஒதுக்குகின்றன.

இருந்தபோதும் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு மிகவும் பிடித்தமான வகையில், வாசகர்களின் மனத்தைச் சுண்டி இழுக்கும் திறமையோடு அரசியல் கிசுகிசு வியாபாரத்தைச் சூடு பறக்க நடத்துபவை ஜூனியர் விகடனும் தராசும்தான். விசிட்டர், நக்கீரன் போன்ற சில்லரை—சின்ன வியாபாரிகளுக்கும் குறைச்சல்இல்லை. சினிமாச் செய்திகளை மட்டுமே வைத்து பத்திரிக்கை நடத்த முடியும் என்றானதைப் போல, பொறுக்கி அரசியல்—கிசுகிசு செய்திகளை மட்டுமே வைத்து பத்திரிக்கை நடத்தமுடியும் என்று இவை சாதித்துக் காட்டியிருக்கின்றன. அகில இந்திய—''தேசிய'' அரசியல் கிசுகிசுகளை முக்கியமாகக் கொண்டு வியாபாரம் நடத்தும் ''துக்ளக்''தான் இந்த ஏடுகளுக்கு முன்னோடி. அதையொட்டி தமிழ்நாட்டு அரசியல் கிசுகிசுக்களை மையமாகக் கொண்டு துவங்கிய ஜூனியர் விகடன் ''குரு''வையும் மிஞ்சி விட்டது.

எம்.ஜி.ஆர் சாவைத்தொடர்ந்து, ஆளும் கட்சிக்குள் சதி, பிளவு, பேரம், ஆட்சிக் கவிழ்ப்பு, கடைசியாக சட்டமன்ற ரௌடித்தனம் என்று பொறுக்கி அரசியல் அனல் பறந்தது. கொல்லைப்புற வழியே ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற மூப்பனார் கும்பல் தோற்றுப் போகவே ஆளுநர் ஆட்சி வந்தது. காங்கிரசின் சுயநலன்களுக்காக காலவரையின்றி தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டன. அந்தச் சமயத்திலும், அதன் பிறகும் பொறுக்கி அரசியலின் விறுவிறுப்புக் குறையாமல் சூடேற்றிக் கொண்டே இருப்பவை கிசுகிசுப் பத்திரிகைகள்.

பொறுக்கி அரசியல் தலைவர்கள் பிரமுகர்களின் சொந்த வாழ்க்கை விவகாரங்களைத் தோண்டித் துருவிக் கொண்டு வந்து பரப்பினார்களா? ஓட்டுக் கட்சிகளுக்குள் நடக்கும் உட்கட்சிப் பூசல்களைத் துப்புத் துலக்கி வெளியே சொன்னார்களா? கூட்டணிக் கட்சிகளுக்கிடையே நடக்கும் பேரங்கள், முறிவுகள், புதிய கூட்டுகள் பற்றி உளவு பார்த்து அறிவிப்பு செய்தார்களா? அரசியல் சக்திகள்—மக்கள் உணர்வுகள் பற்றிய ஆய்வுகள் செய்து அரசியல் ஆருடங்கள் சொன்னார்களா? இல்லை.

பொறுக்கி அரசியலால் ரசிகர்கள்—வாசகர்கள் போதை ஏற்றிக் கொள்ளும் வகையில் பொய்கள், வதந்திகள், அவதூறுகள், ஊகங்களைப் பரப்பினார்கள். மொத்தத்தில் சினிமாவையும், சினிமா நடிகர்—நடிகைகளையும்பற்றி அவற்றின் ஆபாச வக்கிர வாழ்க்கைக்கே மெருகூட்டி கவர்ச்சியை உருவாக்குவதுபோல பொறுக்கி அரசியலுக்கும் அதன் தலைவர்களுக்கும் — வாசகர்களிடையேயும் அவர்கள் மூலம் மக்களிடையேயும் பொறுக்கி அரசியலை வெறுப்பதற்கு பதில், அதை ரசிக்கும் வகையிலான கவர்ச்சி—மதிப்பை உருவாக்கியுள்ளார்கள். நாட்டையும், நாட்டு மக்களையும் பாதிக்கும் ஒரு விவகாரத்தைஇயல்பானது, தவிர்க்க முடியாதது, ரசித்து விட்டு மறந்து விடக்கூடிய பொழுதுபோக்கு என்பதாக மாற்றி விட்டார்கள்.

ஜூனியர் விகடன், தராசு போன்ற கிசுகிசு பத்திரிக்கைகள் அரசியல் போதையேற்றும்வேலை

---

* ''சாக்கனா'' கடை என்றால் சிலருக்குப் புரியாது. ''சால்னா'' கடை என்றும் இதைச் சொல்வார்கள். சாராயக் கடைகளின் வாசலில் மிளகாய் பஜ்ஜி, வறுத்தமீன், கறி, முட்டை போன்ற காரசாரமான சரக்குகளை விற்கும் கடைதான் ''சாக்கனா'' அல்லது ''சால்னா'' கடை என்பார்கள்.




படிப்பகம்

www.padippakam.com

யை தெரிந்தே, திட்டமிட்டே, வாடிக்கையான முறையில் செய்து வருகிறார்கள். அதற்கென்றே இந்தப் பத்திரிக்கைகளில் தவறாது சில பத்திகள் ஒதுக்கப்படுகின்றன. மிஸ்டர், பூனையார் ஆகிய பத்திகள் ஜூனியர்விகடனில் கிசுகிசு, பொய்கள் வதந்திகளை எழுதுவதற்காகவே உள்ளன. இதற்காக 'தராசு' பெரிய இடத்து சங்கதி' பாரத விலாஸ் ஆகிய பத்திகளை ஒதுக்கி உள்ளது. நக்கீரன் ஏடு 'டைனிங்டேபிள்', ஊசிப்பட்டாசு, 'பாலி டிரிக்ஸ்' ஆகிய பத்திகளை ஒதுக்கியுள்ளது. விசிட்டர் ஏடு, நம்பிக்கை வட்டாரம் ''இஞ்சக்சன்'', ஆகிய பத்திகளை ஒதுக்கியுள்ளது.

இவை தவிர ''ஸ்பெசல் ரிப்போர்ட்'', ''நேரடி ரிப்போர்ட்'' ''பின்னணித் தகவல்கள்'', பரபரப்பான தகவல்கள், ருசிகரமான தகவல்கள், திடுக்கிடும்தகவல்கள், ''அதிர்ச்சி ரிப்போர்ட்'' 'திகில் ரிப்போர்ட', 'மோதல் ரிப்போர்ட்', ''வெளிவராத செய்திகள்' 'இரகசிய உண்மைகள்',— இப்படி அடைமொழிகளுடன் பல அட்டைப்படக் கட்டுரைகள்—அத்தனையும் வதந்திகள், பொய்கள், அவதூறுகள்.

பொறுக்கி அரசியல் தலைவர்களுடன் இந்த கிசுகிசுப் பத்திரிக்கைகள் நெருக்கமான உறவுவைத்திருப்பதைக் காட்டுவதற்காகவும், காசு வாங்கிக் கொண்டு அவர்களின் பிரச்சாரத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் பலபேட்டிகள். ''மனந்திறந்து பேசுகிறார்'', ஆவேசப் பேட்டி, பரபரப்பான பேட்டி என்கிற அலங்காரத்துடன் வெளியிடுகிறார்கள்.

இந்தக் கிசுகிசுப் பத்திரிக்கைகள் எப்படிப்பட்ட மோசடி—வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன என்பதற்குப் பெரிய—அழமான ஆய்வு தேவையில்லை. இவற்றின் தலைப்புகள், வெறுமனே அட்டைப்படத் தலைப்புகள் கூட காட்டிக் கொடுத்து விடுகின்றன. வாராவாரம் புதுப்புது பொய்கள் கிசுகிசுக்களை படித்து அரசியல் போதை ஏறிய வாசகர்கள் இந்த ஏடுகளின் மோசடிகளை தொடர்ச்சி வைத்துப் படிப்பதில்லை. **அப்பட்டமான மோசடி, சென்ற** வாரத்துக்கு இந்த வாரம் புரட்டிப் போட்டு எழுதுகிறோம் என்பதைப் பற்றி கொஞ்சமும் கூச்சமின்றி இந்த ஏடுகள் மோசடிகளைத் தொடருகின்றன.




கிசுகிசு பத்திரிக்கைகளில் விற்பனையில் முதலிடம் வகிப்பது ஜூனியர் விகடன். 'மேலிடத்தில்' நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதும் இது. எம்ஜிஆர் உயிர் பிரிந்தது எப்போது? ''மஃப்டியில்'' வந்த அமைச்சர்—இது ஒரு இதழில். ஜானகி மந்திரிசபை நீடிக்குமா – கோஷ்டிக்குள் கோஷ்டி. திடுக்கிட வைத்த துப்பாக்கி சத்தம்—இது அடுத்த இதழில். ஜானகியைச் சந்தித்தது எப்படி —எம்ஜிஆரே எழுதிய கட்டுரை— ஜானகியிடம் பிரதமர் கேட்ட கேள்வி. டெல்லியில் நடந்தது என்ன? பின்னணித் தகவல்கள். ''கிச்சன்காபினட் அயிட்டங்கள்'' —இது மூன்றாவது இதழில். திரை விலகுகிறது—ஜானகிக்கு ஜனாபதி ஆதரவு! கூட்டணி ஆட்சிக்கு காங்கிரசு முயற்சி. வீரப்பன் புறக்கணித்த ஜானகியின் விழா. இது நான்காவது இதழில். ஜானகிக்குத் துணை நின்ற மும்மூர்த்திகள் சாத்தூரார் வீட்டில்-இது ஐந்தாவது இதழில். உயிர் பிரிந்த அனறு எம்ஜிஆர் கலைஞரை சந்திக்க விரும்பினார்; இ.காங் குழப்பம்; அனுதாப அலை உண்டாக்க ஜானகி முயற்சி - நாடகம்; கட்சி மாறுகிறது. தி.க தேர்தல்ல் குதிக்கும்.—இது ஆறாவது இதழில்.

சவாலே சமாளி: ஜெயலலிதா தயாராகிறார். தமிழகத்தில் போர் முரசு என்று ஐந்து இதழில் தூக்குகிறது. ஜெயலலிதாம்பிகை: பூசாரிகள் கலாட்டா என்றுஅடுத்த இதழில் தாக்குகிறது. மூப்பனார் வருகிறார் பராக்! பராக் என்றுஇந்தப் பக்கம் சாயும் அடுத்த இதழில் கலைஞரின் உற்சாகமான சுற்றுப் பயணம் (தேர்தலுக்குத் தயார்!) மீசையைமுறுக்குகிறதுதிமுகஎன்று அந்தப்பக்கம்சாய்கிறது. இரட்டை இலை சின்னம் யாருக்கு? சில தகவல்கள்; தனித்துப்போட்டியிடுவோம்! ஜெயலலிதா அலட்டல்... பிரதமரின் எரிச்சல் என்று தூக்கிய ஜெயலலிதாவை வீசுகிறது.

ஆர்வி—கலைஞர் சந்திப்பு, ராஜீவ் பார்வை திமுக பக்கம் திரும்புமா? தமிழகத்தில் காங்கிரஸ் தந்திரம் பலிக்கிறது. தேர்தல் ''சஸ்பென்ஸ்'' —தனித்துப் போட்டியிட மூப்பனார் பிரம்மப் பிரயத்தனம். பண்ருட்டியின் மனக்கசப்பு தீவிரமாகிறது—இது ஏப்ரல் மாத இதழ்களில்: ஜெயலலிதா—காங் ஒப்பந்தம் முடிவானது எப்படி—பண்ருட்டியின் வெற்றி. பண்ருட்டி பூட்டாசிங் சந்திப்பில் ஒரு ஜோசியர்—இது ஜுன் மாத இதழ்களில்.

நீயா? நானா— ப. உ. ச— ஆர் எம் வி மோதல், ஜெயலலிதாவின்ஊட்டி ''விசிட். மூட் அவுட்'' நாவலர் தலைமையில் புதிய அணி ''நானே பட்டத்து ராணி''— ஜெயலலிதாமுழக்கம்—பின்னணித் தகவல்கள்.

கடைசி ரவுண்ட்...?! ஜெயலலிதா நீக்கம். நால்வர் அணி அடுத்த நடவடிக்கை என்ன?— விறுவிறுப்பான தகவல்கள். **கே கே எஸ் எஸ் ஆர் ஆர் கதி** என்ன? ஜெயலலிதா அரசியலில் இருந்து விலக முடிவு?—பிரதமர் செயலாளர் கொடுத்த டோஸ்! வி பி சிங் ஆதரவு இல்லை. இவை ஜெயலலிதா அணி பற்றிய ஜூவி கிசுகிசுகள்.

மூப்பனார் பராக்! பராக்! பிரதமரின் அதிரடி விசிட்; களையெடுக்கிறார் மூப்பனார். மூப்பனார் — ஜானகி — ராமதாஸ்— நெடுஞ்செழியன் கூட்டு. தமிழ் நாட்டில் ராஜீவ் போட்டி. மூப்பனார், நாவலர், ஜெயலலிதா போட்டியிடும் தொகுதிகள். பார்லிமெண்டுக்கும் சேர்த்துத் தேர்தல். கூட்டணியில் சேர இ. காங்கிரசுக்கு ஜானகி அணி 5 நிபந்தனைகள். பாண்டிச்சேரி அரசியல்— தமிழகத்துடன் சேர்த்துத் தேர்தல்!—இவை ஜூ.விகடனின் ''மேலிட'' உறவு அடிப்படையிலான கிசுகிசுக்கள்.

ஜூனியர் விகடனுக்குப் போட்டியாக கொச்சையான கிசுகிசுகளையெழுதிப் பரபரபேற்படுத்துவது தராசு. ப.வு.ச.வுக்கு கல்தா. தோட்டத்தில் இருந்த

www.padippakam.com




25 கோடி ரூபாய். தேர்தல் சூடு பிடிக்கிறது. கலைஞர்—அன்பில் நேரடி மோதல். எம்ஜிஆருக்குத் தெரியாமல் ஜானகி செய்தது. ஜெயலலிதா—எம்ஜிஆர் திருமண ரகசியங்கள். தமிழகத்தில்யாருக்கு ஆதரவு 6 கருத்துக் கணிப்பு முடிவுகள். ஜெயலலிதா சிபிஐ சிஐஎம் கூட்டணி உருவாகிறது. தமிழக காங்கிரசு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார் மூப்பனார். ஜெயலலிதாவின் கூத்தாநல்லூர் ரகசிய விசிட். பண்ருட்டியிடம்—ஜெயலலிதா சரணாகதி: கருணாநிதிக்குத் குறி சொன்ன ஒண்டிக் கருப்பன். கருணாநிதி—ராஜாராம் ரகசிய ஆலோசனை. ஜெயலலிதா—காங்கிரசு கூட்டணி புதிய திருப்பங்கள். போனஸ்: எம்ஜிஆருக்கு அமெரிக்காவில் நடந்த ஆப்பரேஷன்—சில வெளிவராத உண்மைகள்—இன்னும் முடிவில்லாத மோசடிகள். வீரப்பன், பண்ருட்டி, திருநாவுக்கரசு ஜெயலலிதா, அவருடைய அண்ணன் என்று பலரின் மனத்திறந்த பேச்சுக்களைப் போட்டுவிற்பனையில் பரபரப்பு ஏற்படுத்தி அதிகரித்துக் கொண்டது தராசு. இவை அனைத்தும் பொறுக்கி அரசியலை கொஞ்சமும் வெட்கமின்றி பிரச்சாரம் செய்வதற்காக செய்து கொடுத்த ஏற்பாடுகள்.

ஜூ. விகடன், தராசு ஆகிய ஏடுகளின் வியாபாரத்தைக் கண்டு துவங்கப்பட்ட விசிட்டர் வியாபாரம் படுத்து வந்தாலும், தொடர்ந்து நட்டப்பட்டாவது கிசுகிசு வியாபாரத்தை நடத்துகிறது. சந்தையில் தாக்குப் பிடிப்பதற்காக கூடுதலான காரம் சேர்த்துக்கொள்ளுகிறது. பாக்கியராஜுக்கு வந்த கட்டை விரல் பார்சல்; தமிழகத்தில் மூப்பனார், டெல்லியில் ஜெயலலிதா—கூட்டு ஏற்பாடு, முஸ்லீம்-லீக் ஜெயலலிதா அணி உறவு; திமுக—காங்கிரசு தேர்தல் உடன்பாடு; ஜெயலலிதா விஜய்மல்லமாவைச் சந்திக்க ரகசிய பெங்களூர் பயணம்; திமுகவுக்குள் குத்து வெட்டு! நானே எண் 2-பழசு; ஜெயலலிதாவுக்கு யானை மாலை போட மறுத்தது; ஜெயலலிதா—காங்கிரசு உடன்பாடு முடிந்தது. பைத்தியத்துடன் ஜெயலலிதா மோதல்; விஜய் மல்லையாவுக்கு ஜெயலலிதா போன் செய்தார்; முல்லைத்தேர் பவனியா? அன்பழகன் எரிச்சல்—கலைஞர் விழா ரத்து. ஜூலையில் தேர்தல்! பூட்டாசிங் முடிவு; பொன்னையன் சங்கராச்சாரி ரகசிய சந்திப்பு. நாவலர் அணியில் ஜானகி, 'ப.உ.ச.' திமுகவில்; விபிசிங்—ஜெயலலிதா ரகசிய சந்திப்பு, தியாகிகளா? கலைஞரா? திமுக போர்; ஜெயலலிதா அமெரிக்க பயணம்—மருத்துவர் பரபரப்பான மருத்துவ ரிப்போர்ட்; வீரப்பனை ஓரம் கட்டுகிறார்கள். திமுகவை எதிர்க்க ஜானகி -காங்கிரசு கூட்டு; தேசிய முன்னணி விழாவில் அமெரிக்கஅதிகாரிகள். திமுக மேடையில் ஜெயலலிதா. - இவை எம்ஜிஆர் சாவுக்குப் பிறகு தொடர்ந்து விசிட்டர் எழுதிய கிசுகிசு செய்திகள்.

தராசு ஏட்டின் வெற்றியை கண்டு, அதிலிருந்து தனியே பிரிந்து வியாபாரம் தொடங்கியது நக்கீரன். இதுவும் விறுவிறுப்பான வியாபார நோக்கத்தோடு கூடுதலான காரத்தோடு கிசுகிசுக்களை எழுதுகின்றது. ஜெயலலிதா—ஜானகி போட்டியிடும் தொகுதிகள்; திமுக வேட்பாளர் பட்டியல்; தமிழகத் தேர்தலில் ராஜீவ் ஆலடி அருணா நேரடிப்போட்டி; ஜெயலலிதா மகள்; ஜெயலலிதா அணி வேட்பாளர் பட்டியல்; ''எனக்கும் சிதம்பரத்துக்கும் தொடர்பு கிடையாது''—ஜெயந்தி நடராஜன் பேட்டி; ''எஸ்.எஸ். ஆரைப் பிரிந்து என் குடும்பத்தைக்கெடுத்தவள்—'ஜெயலலிதா' விஜயகுமாரி பேட்டி; திமுக—ஜெயலலிதா கூட்டு—திடுக்கிடும் திருப்பம்; நாஞ்சில் மனோகரனுக்குக் கல்தா—கருணாநிதி முடிவு; பண்ருட்டி கோஷ்டியில் பிளவு. ஜெயலலிதா கொடி பறக்குது; வரிந்து கட்டுகிறார் வீரப்பன்—ஜானகிக்கு எதிராக 30மாஜி எம் எல்ஏக்கள் போர்க் கொடி; கருணாநிதி—செழியன் ரகசிய உடன்பாடு; பண்ருட்டி கோஷ்டிக்கு நெடுஞ்செழியன் டாட்டா; ப. சிதம்பரத்துக்குக் கல்தா—இவை நக்கீரன் பரப்பிய புளுகுகள்.

இந்த கிசுகிசுப் பத்திரிக்கைகள் என்ன என்ன எழுதுகின்றன என்பதை தொகுத்தாலே இவர்களுடைய பித்தலாட்டம் புரிந்துவிடும். குடிகாரனும், சூதாட்டக்காரனும் அதற்கு அடிமையாகிவிட்ட பிறகு கேடுகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அப்படி ஒரு அரசியல் சூதாட்ட, அரசியல் போதைக்கு அடிமையான கட்சித் தொண்டர்கள் — வாசகர்களிடம் இவர்கள் வியாபாரம் தொடர்கிறது. இன்றைய அரசியல் தரத்துக்கு இவை பதிவேடுகள். இவற்றைக் கரங்களில் வைத்திருப்பதே அவமானம், வெட்கக்கேடு என்பதை உணரும்வகையில் அம்பலப்படுத்த வேண்டும். பொறுக்கி அரசியலுக்கு எதிரான போராட்டம், அதைப் பரப்பும் ஏடுகளுக்கு எதிராகவும் தொடர வேண்டும்.

## புரட்சித் திருமணங்கள்

தாலி, சடங்குகள் இல்லாமல் பெற்றோர், உறவினர், நண்பர்கள், தோழர்கள் முன்னிலையில் திருமணங்கள் நடந்துள்ளன. தோழர்களுக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்!

நாள்: 27-3-88; இடம்: துறையூர். மணமக்கள்: தோழர்கள் M. அண்ணாதுரை, M. செந்தாமரை

நாள்: 14-8-88; இடம்: திருவண்ணாமலை. மணமக்கள்: தோழர்கள் M. சண்முகசுந்தரம், M. சரளா:

—மக இக, தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com



# எழுத்தரின் மரணம்

**“எங்கெல்லாம் அற்பத்தனங்கள் இருக்கிறதோ அவற்றை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தினார் ஆன்டன் செகாவ்” என்றார் மாக்சிம் கார்க்கி. தேவையே இல்லாமல் அற்பத்தனத்தோடு அடிமைப்புத்தியோடு வாழும் மத்தியதர வர்க்கத்தை சாடும்செகாவின் இச்சிறுகதை இன்றைய சூழ்நிலைகளுக்குமிகப் பொருத்தமானது.**

அருமையான ஓர் இரவில் அருமையான எழுத்தர் இவான் திமீத்ரிவிச் செர்வியாக்கவ்* நாடகக் கூடத்தில் இரண்டாவது வரிசையில் அமர்ந்து, காட்சிக் கண்ணாடியின் துணை கொண்டு Les Cloches de Corneville நாடகம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். கண்ணும் கருத்துமாய் நாடக மேடையைக் கவனித்த அவர், தம்மையொத்த ஒரு பாக்கியசாலி உலகில் யாரும் இருக்க முடியாதென நினைத்தார். அப்பொழுது திடுமென.... ‘‘திடுமென’’—எதற்கெடுத்தாலும் உபயோகிக்கப்பட்டு சலிப்பூட்டும் தொடராகி விட்டது இது; ஆயினும் வாழ்க்கையானது எதிர்பாராத திடீர் நிகழ்ச்சிகள் நிறைந்ததாய் இருப்பதால் எழுத்தாளர்கள் இந்தத் தொடரை உபயோகிக்காமல் என்ன செய்வார்கள்? ஆகவே, அப்பொழுது திடுமென அவருடைய முகம் சுருங்கிக் கோணிற்று, விழிகள் உருண்டு விண்ணோக்கி உயர்ந்தன, மூச்சு தடைப்பட்டு நின்றது... காட்சிக் கண்ணாடியிலிருந்து முகத்தைத் திருப்பி உடலை மடக்கி ஆசனத்தில் கவிழ்ந்தார், அதற்குள்— உ-ஊச்சு! அதாவது ஒரு தும்மல் தும்மினார். எவரும் எங்கு வேண்டுமானாலும் தும்மலாம், யாருக்கும் இந்த உரிமை உண்டு. விவசாயிகள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், ஏன் அரசு ஆலோசகர்களுங்கூட தும்முகிறார்கள். எல்லோரும் தும்மவே செய்கிறார்கள்—யாரும் விதிவிலக்கில்லை. செர்வியாக்கவ் பதைத்துப் போகவில்லை, கைக்குட்டையை எடுத்து மூக்கைத் துடைத்துக் கொண்டார். பிறகு தமது தும்மலால் யாருக்கும் தொந்தரவு எற்பட்டிருக்குமோ என்று, நற்குணச் சீலருக்கு ஏற்ற முறையில் சுற்றிலும் திரும்பிப் பார்த்தார். உடனே பதைபதைத்துப் போனார். ஏனெனில் அவருக்கு நேர் முன்னால் முதல் வரிசையில் உருவத்தில் சிறியவராய் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர் முணுமுணுத்தபடி வழுக்கைத் தலையையும் கழுத்தையும் கவனமாய்க் கையுறையால் துடைத்துக் கொள்வது அவர் கண்ணில் பட்டது. அந்தக் கிழவர் யாரென்று செர்வியாக்கவ் தெரிந்து கொண்டுவிட்டார்—அவர் போக்குவரத்து அமைச்சகத்தின் நிர்வாகியான ஜெனரல்* பிரிழாலவ்.

‘‘இவர் மீது அல்லவா தும்மிவிட்டேன்!’’ என்று செர்வியாக்கவ் தம்முள் கூறிக் கொண்டார். ‘‘இவர் எனது அலுவலகத்தின் அதிபரல்ல, என்றாலும் அசம்பாவிதச் செயலாயிற்றே! மன்னிப்பு கேட்க வேண்டும்’’ என்று முடிவு செய்தார்.

மெல்ல இருமியபடி முன்னால் சாய்ந்து ஜெனரலின் காதுக்குள் சொன்னார்:

---

* புழுவைக் குறிக்கும் செர்வியாக் என்னும் ருஷ்யச் சொல்லிலிருந்து புனையப்பட்டிருக்கும் பெயர்.—(மொழிபெயர்ப்பாளர்.)

* ஜார் கால ருஷ்யாவில் சிவில் துறை அதிகாரிகளின் உயர் பிரிவுகளைச் சேர்ந்த தனி ஆலோசகர், அரசு உயர்நிலை ஆலோசகர், அரசு ஆலோசகர் ஆகிய பதவிகள் வகித்தோர் ஜெனரல் என்னும் பட்டத்துக்கு உரியோராய் இருந்தனர்.—(பதிப்பாசிரியர்.)



படிப்பகம்

www.padippakam.com

''மேதகையீர், பொறுத்தருள வேண்டும், தும்மி விட்டேன்.... மனமறிந்து செய்ததல்ல....''

''சரி, பரவாயில்லை.''

''மன்னிக்க வேண்டும். நான்... வேண்டுமென்று நினைத்துச் செய்த காரியமல்ல!''

''போதும் ஐயா! நான் நாடகம் பார்க்கணும், சும்மா இரும்!''

செர்வியாக்கவ் சற்றுப் பதற்றத்துடன் அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, நாடக மேடையில் கவனம் செலுத்த முயன்ருர். நடிகர்களை உற்று நோக்கினர், ஆனல் முன்பு போல் இப்பொழுது அவர் தம்மையொத்த ஒரு பாக்கியசாலி உலகில் யாரும் இருக்க முடியாதென நினைக்கவில்லை. தவறிழைத்து விட்டோமே என்ற மன உறுத்தல் அவரை அரித்துத் தின்றது. இடைவேளையின் போது பிரிழாலவின் அருகே நடந்து சிறிது நேரம் தயங்கி நின்றபின் மனதை ஒருவாறு தைரியப்படுத்திக் கொண்டு, பாதி வார்த்தையை விழுங்கியவாறு கரகரக்கும் குரலில் சொன்னர்:

''மேதகையீர், தங்கள் மீது தும்மினேன்... மன்னிக்க வேண்டும்... தவருய் நினைக்கலாகாது... வேண்டுமென்று செய்ததல்ல....''

''என்ன இது... அப்போதே மறந்துவிட்டேன், இன்னுமா அதைப் பற்றி பேசணும்?'' என்று, பொறுமை இழந்து அடி உதடு துடிக்கக் கூறினர் ஜெனரல்.

''மறந்துவிட்டதாய்ச் சொல்கிருர், ஆனல் அவர் கண்கள் ஒளிர்வதைப் பார்த்தால் நன்ருய் இல்லையே'' என்று எண்ணிய செர்வியாக்கவ் நம்பிக்கை இல்லாதவராய் ஓரக் கண்களால் ஜெனரலை நோட்டமிட்டார். ''என்னுடன் பேச அவருக்கு விருப்பமில்லை. விளக்கமாய் அவரிடம் சொல்ல வேண்டும். தும்ம வேண்டுமென நினைத்துச் செய்ததல்ல... இயற்கை விதி என்று விளக்க வேண்டும், இல்லையேல் அவர் மீது எச்சில் துப்ப வேண்டுமென்று நான் இதைச் செய்ததாய் நினைத்துக் கொள்வார். இப்பொழுது நினைக்காவிட்டாலும் பிற்பாடு அவர் நினைக்கக்கூடும்!...''

வீட்டுக்குத் திரும்பியதும் செர்வியாக்கவ் தமது கண்ணியக் குறைவான நடத்தை குறித்துத் தம் மனைவியிடம் சொன்னர். ஆனல் மனைவி இதைப் பெரிதாய் நினைக்காமல் அலட்சியப்படுத்தியதாய் அவருக்குத் தோன்றிற்று. கணப் பொழுது கலங்கவே செய்தாள் என்ருலும், பிரிழாலவ் ''நமது'' அதிபரல்ல என்பது தெரிந்ததும் அவள் தைரியமடைந்துவிட்டாள்.

''எதற்கும் நீ போய் அவரிடம் மன்னிப்பு கேட்பது நல்லதென நினைக்கிறேன்'' என்ருள். ''இல்லையேல் நாலு பேருக்கு முன்னல் பாங்காய் நடந்து கொள்ளத் தெரியாத ஆளாய் உன்னை அவர் நினைத்துக் கொள்வார்.''

''ஆம், அப்படித்தான் நினைத்துக் கொள்வார்! மன்னிப்பு கேட்பதற்கு எவ்வளவோ முயன்று பார்த்தேன், ஆனல் அவர் ஒரு விபரீத மனிதர், நல்லபடியாய் ஒரு வார்த்தை சொல்லவில்லை. தவிரவும் பேசுவதற்குஅவகாசம் கிடைக்கவில்லை.''

மறு நாளன்று செர்வியாக்கவ் தமது பணித் துறைக்குரிய புதிய நெடுங் கோட்டு அணிந்து, முடியையும் வெட்டிக் கொண்டு, தமது நடத்தை குறித்து விளக்கம் அளிப்பதற்காக பிரிழாலவிடம் சென்ருர். ஜெனரலின் வரவேற்பறை நிறைய் விண்ணப்பதாரர்கள் கூடியிருந்தனர். ஜெனரலும் அங்கு வீற்றிருந்து விண்ணப்பங்களை வாங்கிப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். கூடியிருந் தோரில் சிலருடன் பேசி முடித்தபின் ஜெனரல் தமது பார்வையை உயர்த்திச் செர்வியாக்கவின் முகத்தில் பதிய வைத்தார்.

''மேதகையீர், நேற்று இரவு உங்களுக்கு நினைவில் இருக்கும், அர்காதியா நாடக மன்றத்தில்...'' என்று ஆரம்பித்து, ''நான் உம் — தும்மினேன், அதனல் உம் — தங்களுக்கு... மிக்க வருந்துகிறேன்...'' என்று இழுத்தார்.

''அடே, அபத்தம்! அபத்தம்!'' என்ருர் ஜெனரல். பிறகு அடுத்தவரைப் பார்த்து ''உங்களுக்கு நான் செய்யக் கூடியது என்ன?'' என்று விசாரித்தார்.

செர்வியாக்கவுக்கு முகம் வெளிறிட்டுவிட்டது. ''காது கொடுத்துக் கேட்க மாட்டேன்கிருரே!'' என்று தனக்குள் கூறிக் கொண்டார். ''அப்படியானல் கோபப்படுகிருர் என்றுதானே அர்த்தம்... இதை இந்த நிலையில் விட்டுவிட்டு நான் போகக் கூடாது.... விளக்கமாய் அவரிடம் சொல்லியாக வேண்டும்....''

கடைசி விண்ணப்பதாரருடனும் பேசி முடித்த பின் ஜெனரல் தமது தனி அறைக்குப் போவதற்காகத் திரும்பியபோது செர்வியாக்கவ் அவர் பின்னல் ஓடி முணுமுணுக்கும் குரலில் சொன்னர்:

''மேதகையீர், மன்னிக்கணும்! என் தவறுக்காக உள்ளம் குமைகிறேன், இல்லையேல் எனக்கு இந்தத் துணிவு வந்திருக்காது, மேதகையீரைத் தொல்லை செய்ய நினைத்திருக்க மாட்டேன்...''

ஜெனரல் வாய்விட்டு அழப்போகிறவர் மாதிரி தோன்றினர், விலகிப் போய்விடும்படி கையை வீசிக் காட்டினர்.

''என்னைக் கேலி செய்யாதீர்!'' என்று சொல்லி செர்வியாக்கவினுடைய முகத்தின் எதிரே கதவைத் தள்ளி மூடினர்.

''கேலி செய்கிறேன!'' என்று தனக்குள் முனகிக் கொண்டார் செர்வியாக்கவ். ''இதில் வேடிக்கை எதுவும் இருப்பதாய்த் தெரியவில்லையே எனக்கு. ஜெனரலாய் இருக்கிருர், இது புரியவில்லையா, என்ன? சரி, இனி நான் இந்த அரிய மனிதரிடம் வந்து மன்னிப்பு கேட்டுத் தொந்தரவு செய்யப் போவதில்லை. நாசமாய்ப் போக! இவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிடுகிறேன், இனி ஒரு போதும் இவரிடம் வர மாட்டேன்! மாட்டவே மாட்டேன்!''

வீட்டுக்குத் திரும்பி நடந்த போது செர்வியாக்கவின் மனத்துள் ஓடிய சிந்தனைகள் இவை. ஆனல்

25-ம் பக்கம் பார்க்க

பர்மா:

# குமுறும் எரிமலை

"சாவதற்கு நான் அஞ்சவில்லை. நாங்கள் போரிட்டே தீர வேண்டும். ஜனநாயகத்துக்கும் பொதுத் தேர்தல் நடத்துவதற்கும் இராணுவக் கும்பல் வாக்குறுதி செய்கிறது; அதே சமயம் ரங்கூன் நகரத் தெருக்களில் நூற்றுக்கணக்கான மாணவர்களைச் சுட்டுத் தள்ளுகிறது. நாங்கள் ஆயுதபாணியாகி எதிர்த்துப் போரிட வேண்டியுள்ளது" என்று கோபமும் உறுதியும்பொங்க கூறுகிறார் மீமீ.

மீமீ பத்தொன்பதே வயதான ரங்கூன் பல்கலைக்கழக இளம் மாணவி. இப்போது அவள் அங்கு இல்லை. அவளைப் போன்ற நூறு இளம் மாணவிகள் உட்பட 1800 மாணவர்களோடு தாய்லாந்து—பர்மா எல்லையிலுள்ள திபாவ்போ முகாமில் ஆயுதப் பயிற்சி பெறுகிறாள். அடர்ந்த காடுகள் நிரம்பிய மலைகளுக்கு மத்தியிலே உள்ளது திபாவ் போ முகாம். நகரத்துச் சாயல் உடையிலும் முகத்திலும் பரவியுள்ள இந்த இளைஞர்கள் மலைவாழ் மக்களோடு கலந்திருக்கும்போது தூக்கலாகத்தெரிகிறது. அங்கே, கடந்த 40 ஆண்டுகளாக இனவிடுதலைக்காகப் போரிடும் காரன்கள் மற்றும் பிற மலைவாழ் மக்கள் பிரிவினரோடு இந்தஇளைஞர்கள் இணைந்துள்ளார்கள்.

"இப்போது நகரங்களில் நடந்த மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்கள் முடிந்துவிட்டன. அரசாங்க—இராணுவத்தினால்சுட்டுக் கொல்லப்படுவதினால் உண்மையில் ஒரு பயனும் கிடையாது; நாட்டை ஆளும் இராணுவ மேட்டுக்குடி கும்பல் தானாகவே அதிகாரத்தை விட்டுக் கொடுக்காது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். எனவேதான் ரங்கூனில் உள்ள இராணுவ கும்பலுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்திற்காக நாங்கள் தயாரிப்பு செய்கிறோம்" என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார் ஹலா ஆங். ரங்கூன் கலை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறையில் பட்ட மேற்படிப்புப் படிக்கும் 29 வயதான மாணவர்; அனைத்து பர்மா மாணவர்கள் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர்.

திபாவ் போவைப் போல பல மாணவர்—இளைஞர் ஆயுதப் பயிற்சி முகாம்கள் தாய்—பர்மா எல்லை நெடுகிலும்எழுந்துள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் குறைந்தது 10,000 மாணவர்களும் ஜனநாயகத்துக்காகப் போராடும் செயல்வீரர்களும் மலைகளில் அமைந்துள்ள இந்த முகாம்களை அமைத்துள்ளனர். கச்சின் சுதந்திரப் படை, காரன் தேசிய விடுதலை முன்னணிப் படை ஆகிய இனவிடுதலைப் போராளிகளுடன் அவர்கள் இணைந்துள்ளார்கள். "தேசிய இனப் போராளிகளும் கூட எங்களுடைய சகோதரர்கள் தாம்!" என்கிறார்கள் மாணவர்கள்.

தேசிய இனவிடுதலை இயக்கங்களும், கம்யூனிசப் புரட்சியாளர்களும் இணைந்து நடத்திவந்த மக்கள் யுத்தம் இதுவரை வடபர்மாவின் மலைகளிலும் காடுகளிலுமே மையங் கொண்டிருந்தன. இப்போது பர்மிய மக்கள் பெருமளவு வாழும் மத்திய சமவெளிகளுக்கும், தெற்கத்திய வடிகால் வெளிகளுக்கும் பரவுகிறது. கிராமங்களில் குடிகொண்டிருந்த புரட்சி நகரங்களை நோக்கி நகருகிறது.

"காடுகளில் போரிடும் இன்னொரு 'கலக'ப் படையாக மட்டும் அமைவதற்கு மட்டும் நாங்கள் விரும்பவில்லை. நகர்ப்புறப் கொரில்லாப் போரை நடத்தவும், இராணுவ நிலைக்களன்கள், எரிபொருள் கிடங்குகள் ஆகிய குறிப்பான நகர்ப்புற இலக்குகளைத் தாக்குவதற்கும் கற்றுக் கொள்ள விரும்புகிறோம். குறிப்பாக, ஆகஸ்டு—செப்டம்பரில்நிரா



காடுகளில் ஆயுதப் பயிற்சிபெறும் மாணவர்கள் கூட்டாக உணவருந்துகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

யுதபாணிகளான கிளர்ச்சியாளர்களைக் கொல்லும்படி உத்திர விட்ட வெறுக்கத்தக்க இராணுவ அதிகாரிகளைத் தாக்குவதற்குக் கற்றுக் கொள்ள விரும்புகிறோம்'' என்று கோபாவேசத்தோடுசொல்லுகிறார் ஹலா ஆங்.

ஆயுதப் பயிற்சி பெறுவதற்காகக் காடுகளில் அந்த இளைஞர்கள்—மாணவர்கள் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். இருந்த போதும் பரந்து விரிந்த அளவு நகரங்களில் இரகசிய—தலைமறைவுத் தொடர்புகளையும் அமைப்புகளையும் கட்டியுள்ளனர். பாசிச இராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான வெளிப்படையான சட்டபூர்வ இயக்கங்களோடு இணைந்து ஜனநாயகத்துக்கான தேசிய ஐக்கிய முன்னணி அமைத்துள்ளனர். ''இவையெல்லாம் ஜனநாயகத்துக்கான ஒரே போராட்டத்தின் அங்கமாகும். விதிமுறைகள்தாம் வேறு வேறானவை'' என்று தெளிவாகவே சொல்லுகிறார்கள், மாணவர்கள்.

உலகமெங்கும் பிற்போக்கு—சீரழிவு அலைவிசும்போது, பர்மிய மாணவர்கள் புரட்சி அலையைக் கிளப்பியுள்ளார்கள். ''எங்கெல்லாம் ஒடுக்குமுறை இருக்கிறதோ



'மரணத்திற்கு நாங்கள் அஞ்சவில்லை!'—ரங்கூன் பல்கலைக்கழக மாணவி மீமீ.

அங்கெல்லாம் 'கலகம்' பிறக்கும் என்றார் மாவோ. 'கலகம்' செய்வது உரிமை'' என்றும் பிரகடனப் படுத்தினார். இருபத்தாறு ஆண்டுகள் கொடுமையும்—துயரமும், தனிமையும்—இருளும் நிறைந்த பாசிச ஒடுக்குமுறை பர்மாவில் நிலவியது. இனியும் அதை சகித்து கொள்ள முடியாது என்று கொதித்தெழுந்தார்கள் பர்மிய மாணவர்கள்.

1962இல் அதிரடி ஆட்சிக்

# இந்தியத் தலையீடு?

அக்டோபர் 24ந் தேதி தகவல்களின்படி, பர்மிய எல்லை நெடுகிலும் இந்திய இராணுவம் தயார் நிலையில் இருக்கும்படி உத்திரவிடப்பட்டுள்ளது ''பர்மிய ராணுவம்துரத்திக் கொண்டுவரும் பர்மிய அகதிகள், குறிப்பாக மாணவர்கள் மிஜோரம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களைத் தொடர்ந்து வந்து பர்மிய ரகசிய உளவாளிகள் கொலை செய்யலாம் என்று அஞ்சப்படுகிறது. எனவே இந்திய இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அகதிகள் பாதுகாப்பான இடங்களுக்கு (மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் முகாம்களுக்கு) அனுப்பப்படுகின்றனர். அகதிகளினூடாகவே பர்மியஉளவாளிகள் ஊடுருவுவதை தடுப்பதற்காக இந்திய உளவுப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்'' —என்று இந்திய அரசுத்தகவல்கள் கூறுகின்றன.

பர்மாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பயன்படுத்தி இந்தியா தலையிடுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது. தெற்கு ஆசியாவில் விஸ்தரிப்பு—ஆதிக்கத்தை நிறுவுவது என்பதோடு வேறு ஒரு நோக்கமும் இந்தியாவுக்கு உண்டு. வடகிழக்கு இந்தியாவில் நீண்ட காலமாக நாகா, மிஜோ மக்களின் தேச விடுதலைப் போர்கள் நடக்கின்றன. இந்தியா—பர்மா எல்லையின் இருபுறமும் இவ்வினங்களின் மக்கள் வாழ்கின்றனர். இந்திய எல்லையை அடுத்துள்ள அடர்ந்த காடுகள் நிறைந்த வடக்கு பர்மாவிலும், கச்சின், காரன், மோன் ஆகிய தேசியஇன மக்கள் நீண்டகாலமாக சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதப் போர் நடத்துகிறார்கள். இந்தியாவிலும் பர்மாவிலும் அந்தந்த அரசுகளுக்கு எதிராகப் போராடும் தேசிய இனங்கள் கூட்டுச்சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கின்றனர். வடக்கு பர்மாவில் சிறுசிறு விடுதலைப் பிரதேசங்களை அமைத்து நீண்டகாலமாக போரிடும் பர்மியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள்.

குறிப்பாக பர்மிய எல்லைக்குள் முகாமிட்டு நாகா, மிஜோ போராளிகள் ஆயுதப் பயிற்சி பெறுகிறார்கள். எனவே இந்த இயக்கங்களை ஒடுக்குவதில் இந்திய பர்மிய அரசுகள் ஏற்கனவே இரகசிய உடன்பாடுகள் செய்து கொண்டுள்ளன. இப்போது பர்மாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய அரசு தலையிடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஈழ ஆக்கிரமிப்பு—போர் காரணமாக தேசத்துக்குப் பல கேடுகளை விளைவித்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல்.

ஈழ மக்களின் நண்பனாக நடித்துக் கொண்டே, ஈழப் போராளிகள் மத்தியிலே ஊடுருவி அவர்களைப் பிளவுபடுத்தி, இறுதியாகபாசிச ஜெயவர்த்தனேயுடன் ஒரு ஒப்பந்தம் போட்டு கொண்டு ஈழத்தில் ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்கி நடத்துகிறது. அதே மாதிரி ஜனநாயகத்தின் காவலனாக நடித்து பர்மாவில் இந்திய பாசிச ஆளும் கும்பல் தலையிடக் கூடும். பர்மாவில் தலையிடுமானால், அது மேலும் கடுமையான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். ஏனெனில் அங்கே ஈழத்தைவிட பன்மடங்கு உறுதியான தேசிய இனவிடுதலைப் போர்கள் நடக்கின்றன. சிறியதாயினும் உறுதியான கம்யூனிசக் கட்சியின் தலைமையிலான செஞ்சேனை போரிடுகிறது. சுருக்கமாகக் கூறினால், பர்மாவில் கடந்த 40 ஆண்டுகளாக ஆயுதந்தாங்கிய புரட்சிக்கும் ஆயுதந்தாங்கிய எதிர்ப் புரட்சிக்கும் இடையே போர் நடைபெறுகிறது. அதிலே தலையிடும் ஆக்கிரமிப்பாளர்களின் தலை தப்பாது!



படிப்பகம்

www.padippakam.com

கவிழ்ப்பின் மூலம் தனது இராணுவ பாசிச சர்வாதிகாரத்தை நிறுவினார் தளபதி நீவின். விவசாயம், ஆலைத்தொழில், வியாபாரம் முதல் பெட்டிக்கடை வரை அனைத்தையும் அரசுடமை ஆக்கினார். முழுக்க முழுக்க இராணுவ—அதிகாரவர்க்க முதலாளித்துவத்தை நிறுவிக் கொண்டு அதை ''சோசலிசப் புரட்சி'', ''சோசலிசத்துக்கான பர்மியப் பாதை'' என்றார். உலகப் போருக்கு முன்பு உலகின் நெற்களஞ்சியமாகவும், எண்ணெய் ஏற்றுமதியில் முக்கிய நாடாகவும் விளங்கியது பர்மா. மூங்கில், அரிதான நவரத்தினக் கற்கள், மற்றும் அரிதான தாதுக்களின் செல்வம் கொழித்த நாடு பர்மா. நீவினுடைய பாசிச இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் உலகிலேயே கடைகோடி நாடாக மாறியது. அரசின் வருமானத்தின் மிகப் பெரும் பகுதியை இராணுவமே தின்று கொழுத்தது. பொருளாதாரம் முழுவதும் இராணுவ—அதிகார வர்க்க பிடியில் சிக்கி எங்கும் எதிலும் லஞ்ச ஊழலும் கள்ளச் சந்தையும் ஆதிக்கம் வகித்தன. நாட்டின் முக்கிய விளைபொருட்கள் யாவும் கடத்தப்பட்டு பாவனை பொருட்கள் கள்ளச் சந்தை—கடத்தல் வளர்ந்தது. மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் தவித்தனர்.

பொருளாதாரம் முற்றாக நிலைகுலைந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் மாணவர்கள் ரங்கூன் தெருக்களில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். நீவினுடைய இரகசியப் போலீசுப் படையினர் நூற்றுக்கணக்கான மாணவர்களைப் படுகொலை செய்தனர். பெயரளவிலான சில சீர்திருத்தங்களைச் செய்து பாசிச ஆட்சியை நீடிக்க நீவின் கும்பல் முயன்றது. கடந்த ஜூனில் மீண்டும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மாணவர்கள் குதித்தனர். ஆயுதந் தாங்கிய பேரெழுச்சிகள் வெடித்தன. இரகசிய போலீசு கொலைகாரர்களை மக்கள் அழித்தொழித்தனர். ஆளும் கட்சி அலுவலகங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

மக்கள் பேரெழுச்சியைக் கண்டஞ்சிய பாசிச நீவின் ஓய்வு பெறுவதாகப் புளுகி தலைமறைவானார். மக்கள் திரள்படுகொலைகளுக்குத் தலைமையேற்று நடத்திய தளபதி செயின் எல்வின் அதிபராக்கப்பட்டார். அக்கொடுங்கோலனுக்கு எதிராக மேலும் உக்கிரமாகக் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்தனர். சில நாட்களிலேயே எல்வின் வீழ்ந்தார். ஆனால் நீவினுடைய எடுபிடியான மாங் மாங் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் பல கட்சி ஜனநாயக ஆட்சிமுறை மற்றும் பொதுத் தேர்தல்கள் நடத்துவதாக வாக்குறுதி அளித்தார்.

ஜனநாயகத்துக்குக் குறைவான எதையும், பொய்யான வாக்குறுதிகளையும் ஏற்க மறுத்த மக்கள் மேலும் மேலும் பேரெழுச்சிகளை நடத்தினர். பொதுவேலை நிறுத்தல்கள் வெடித்தன. நீவினுடைய பாசிச எடுபிடிகள் இல்லாத இடைக்கால அரசையும், சுதந்திரமான தேர்தல்களையும் கோரினர். அரசின் உளவாளிகள், இராணுவ கும்பலின் எடுபிடிகள், நீவினுடைய கட்சிக்காரர்கள், இரகசியப் போலீசுக் கொலை வெறியர்கள் பொது இடங்களில் அழித்தொழிக்கப்பட்டனர். தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், புத்த சந்நியாசிகள் ஆகிய சகல பகுதி மக்களும் ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியில் குதித்தனர்.

கலகத்தை ஒடுக்கி, அமைதி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாகச் சொல்லிக் கொண்டு நீவினுடைய வாரிசாக தளபதி சாவ் மாங் தலைமையில் மீண்டும் பாசிச இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. வெறுக்கத்தக்க இராணுவ வெறியர்களால் திட்டமிட்டு மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீட்டுக் கூரைகளிலே பீரங்கிகளை பொறுத்தி தெருக்களில் ஆயிரக்கான மக்களைச் சுட்டுக் குவித்தனர்.

வேலை நிறுத்தங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தடை செய்தும், நிரந்தரமான இரவு—பகல் ஊரடங்கு விதித்தும் நீவினுடைய படுகொலைப்படை தனது ஆட்சியை சட்டபூர்வமாக்க முயன்றது. ''பர்மிய சோசலிசம்'' என்கிற பெயரில் கடந்த 26 ஆண்டுகளாக நிறுவனமயமாகி விட்ட நீவினுடைய பாசிசத்தை இனியும் ஏற்க முடியாது என்று பர்மிய மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். பர்மிய மக்கள் இதுவரை நடத்திய நகர்ப்புற ஆயுதந் தாங்கிய பேரெழுச்சி நீண்டகால உள்நாட்டுப் போராக வளர்ந்து விட்டது. இந்தப் போர் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மாறாக இந்தியாவில் இப்போதுள்ளதைப் போன்ற பல கட்சி நாடாளுமன்ற போலி ஜனநாயகத்துக்கானதாக குறுகி விடுமானால் அவர்கள் சிந்தும் ரத்தம், செய்யும் தியாகம் அத்தனையும் வீணாகிப் போகும்.

22ம் பக்கத் தொடர்ச்சி

அவர் இந்தக் கடிதத்தை எழுதி அனுப்பவில்லை. எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் அவரால் அதன் வாசகத்தைத் தீர்மானிக்க முடியவில்லை. ஆகவே, யாவற்றையும் சரிசெய்யும் பொருட்டு அடுத்த நாள் அவர் மீண்டும் ஜெனரலிடம் போக வேண்டியதாயிற்று.

மேதகையீர், நேற்று நான் தங்களிடம் வந்திருந்தேன்,'' ஜெனரலுடைய வினவும் பார்வை தம்மீது திரும்பியதும் இவ்விதம் அவர் தமது விளக்கத்தை ஆரம்பித்தார். ''மேதகையீர் நினைத்த மாதிரி நான் தங்களைக் கேலி செய்வதற்காக வரவில்லை. எனது தும்மலால் தங்களுக்கு ஏற்பட்ட தொந்தரவுக்காக மன்னிப்பு கேட்பதற்காகவே வந்திருந்தேன்.... தங்களைக் கேலி செய்யலாமெனக் கனவிலும் நான் கருதக் கூடியவனல்ல. அம்மாதிரியான ஒரு துணிச்சல் எந்நாளும் வராது எனக்கு. பெரியவர்களைக் கேலி செய்யலாமென்ற எண்ணத்துக்கு நாங்கள் இடந் தருவோமாயின், பிறகு மரியாதையே இல்லாமற் போய் விடும்... மேலிடத்தில் இருப்போருக்குக் காட்ட வேண்டிய மரியாதை இல்லாதொழிந்துவிடும்....''

''போ வெளியே! நிற்காதே, போ!'' என்று செக்கச் சிவந்து போய் ஆத்திரம் தாங்காமல் ஆடியவாறு சீறினார் ஜெனரல்.

''புரியலிங்க, என்ன சொல்றீங்க?'' குலைநடுக்க முற்றுப் போன செர்வியாக்கவ் மெல்லிய குரலில் கேட்டார்.

''போ வெளியே!'' என்று காலால் தரையைத் தட்டி மீண்டுமொரு தரம் ஜெனரல் சீறினார்.

செர்வியாக்கவுக்குத் தம்முள் ஏதோ இற்றுப் போனது மாதிரி இருந்தது. காதால் கேட்கவோ, கண்ணால் பார்க்கவோ சக்தியற்றவராய்ப் பின் பக்கமாய் நகர்ந்து கதவை அடைந்தார், பிறகு தெருவிலே இறங்கி மெள்ள நடந்தார். உணர்விழந்த நிலையில் தட்டுத் தடுமாறியபடி வீட்டுக்குத் திரும்பி, தமது பணித்துறை நெடுங்கோட்டுடன் அப்படியே சோபாவில் படுத்து மாண்டு போனார்.



படிப்பகம்

www.padippakam.com

# அப்பன் பேர் தெரியாதவர்கள்!

சொத்துபடைத்தவன் தனது பிள்ளையைப் பொத்திப் பொத்தி வளர்க்கிறான். வியாபாரமோ, படிப்போ எது தேறுகிறதோ அதற்கேற்ப சின்ன வயதிலிருந்தே வார்த்து எடுக்க ஆரம்பிக்கிறான். வியாபாரம் என்றால் நுணுக்கங்களை எல்லாம் ஊட்டி விடுகிறான்; படிப்பு என்றால் வெளிநாட்டுக்கும் அனுப்புகிறான்.

சொத்தைப் பிடிக்கத் தத்தளிக்கும் நடுத்தரவர்க்கமோ ஒரு வேலையைக் குறி வைத்துப் பிள்ளையைப் படிக்க வைக்கப் பார்க்கிறான். அண்டா குண்டான் அடகுவச்சு, அம்மா தாலிய அடகு வச்சாவது பிள்ளை முன்னேறத் துடிக்கிறான். லட்சியத்தை 'அதிருஷ்டம்' என்ற தேரில் கட்டி ஓட்டுகிறான். பட்டால் பாக்கியம்.

உழைப்பை மட்டும் மூலதனமாக வைத்திருக்கும் பாட்டாளி வர்க்கத்திலோ, வர்க்க உணர்வு, நோக்கம் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொழிற்கல்வி படிக்க வைக்கிறார்கள்; காசில்லாதவன் ஏதாவது பட்டறைக்காவது அனுப்பி 'ஒரு நேர்மையான தொழிலாளியா பொழச்சுக்கப்பா' என்று அறிவுரையும் கூறுகிறான். உழைக்கும் விவசாய வர்க்கமானால் முடிந்தால் படிக்க வைக்கிறது; இல்லை என்றால் காட்டுக்கு உழைக்க அனுப்புகிறது. 'உழைத்துச் சோறு திங்கணும்'—இந்த லட்சியம்தான் இந்த வர்க்கத்துக்குப் பெரிசு.



—பிள்ளைகள் வர்க்கத்துக்கு ஏற்றபடி வளர்க்கப்படுகின்றன. எங்கு பிறக்கிறானோ அதற்கேற்ற எதிர்காலம் அவனுக்கு எழுதப்பட்டு விடுகிறது; தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் பிள்ளைகள் தறிகெட்டு வாழ்கின்றா. கெட்டுச் சீரழியவும் செய்கின்றர். ஆனால் சீரழிந்து போவதற்காகவே யாரும் பிள்ளைகளை வளர்ப்பது இல்லை..

'தந்தை மகனுக்குச் செய்யும் உதவி, அவையத்து முந்தியிருக்கச் செய்வது' என்று சொல்வார்கள்.

சமூகத்தில் வளர்ந்து முன்னால் நிற்கச் செய்வது. அதுபோல, 'மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி, இவனுடைய தந்தைஎன்ன பாக்கியம் செய்தானோ என்று ஊரார்?மெச்சவேண்டுமாம்' என்று சொல்வார்கள். இது பொதுவான வழக்கு. ஆனால், சீரழிவதற்காகவே பிள்ளைகளைப் பெற்று உலகிலே தவழ விடுவதைப் பற்றி கேட்டிருக்கிறீர்களா? ஆமாம். அப்படியும் இருக்கிறார்கள். ஒரு வருஷத்துக்கு லட்சத்துக்கும் மேல் அப்படிப்பட்ட குழந்தைகள் பெற்றெடுக்கப்படுகின்றன. அவர்கள்தகப்பன் பேர் அறியாதவர்கள்; அதிர்ச்சியாக இருக்கிறதா?

சீரழிந்து கொண்டிருக்கும் வர்க்க சமுதாயத்தில் இது நடந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்களும் மனிதர்கள்தான். சமுதாய வக்கிரம் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு தூர வீசி எறிந்து விடுகிறது; வெறுத்து ஒதுக்கிவிடுகிறது. அவர்களை முன்பு 'தேவரடியார்கள்' என்று 'அந்தஸ்'தாக அழைத்தார்கள். அதையே இப்போது கொச்சையாகச் சொல்கிறார்கள்; அல்லது விபச்சாரி என்கிறார்கள். அவர்களது பிள்ளைகள் தான் சீரழியவே பிறக்கின்றன அவர்கள்தான் தகப்பன் பேர் அறியாதவர்கள்.

அந்தத் தாய்மாருக்கு தன் பிள்ளையும் ஊரில் உள்ள குழந்தையைப் போல வளர வேண்டும், படிக்க வேண்டும், ஆளாகவேண்டும், வயசான காலத்தில் தனக்கு நிழல் கொடுக்க வேண்டும்—இது தான் ஆசை. 'இதோ பார் உனக்கெதுக்கு இந்த வீண் ஆசை எல்லாம்?' என்று கூறி கனவு காண்பதற்குக்கூட அவளுக்கு உரிமை கிடையாது என்கிறது சமூகம்.

அந்தப் பிள்ளைகள் வாழும் சூழ்நிலை அப்படிப்பட்டது. தாயின் அரவணைப்புக்கு ஏங்கும் அந்தக் குழந்தைகளுக்கு ஏஜண்டு மாமாக்களின் அடி உதைதான் கிடைக்கும். இரவு நேரத்தில் அது வாள்வாள் என்று அழுதுகத்தி 'தொழில்' கெட்டுவிடக் கூடாது என்று அதற்கு அபின்போல ஏதாவது ஊற்றி விடுவாள் தாய். போதையில் அது வாயடைத்துப் போய்த் தூங்கிவிடும். காலை விடிகிறபோது இவர்களின் தாய்களுக்கு இரவு தொடங்குகிறது; இரவுக் களைப்பால் அயர்ந்து போய்த் தூங்குவார்கள். இந்தப் பிள்ளைகள் காலைக் கடனிலிருந்து, சோறு வரை எல்லாத்துக்கும் அலையும். குப்பையில் புரளும், சண்டை போடும்; அதிலேயே வளரும். அந்தத் தாய்கள் எப்படியாவது ஆள் பிடித்துப் பள்ளிக்கூடத்துக்கு அவைகளை அனுப்பினாலும், அதன் கிழிந்த துணி, அழுக்குச் சட்டை, வாரித்திருந்த சீவப்படாத பரட்டைத் தலையைப் பார்த்து வாத்தி கிண்டல் அடிக்கும். ஓரமாக அலட்சியமாக உட்காரச் சொல்லும். பிள்ளைகளாகவே பள்ளிக்கூடம் போவதை நிறுத்திக் கொள்ளும். இதுதான் சாதாரணமாக நடக்கிற விஷயம்.

அது மட்டுமா? பள்ளிக்கூடம் நுழையும்போதே தாய்க்குத் திகில் வந்து கவ்வும். முதல் கேள்வி; அப்பன் பேரு என்னடா? அந்தத் தாய் சொல்ல முடியாமல் கூட்டிக் கொண்டு திரும்புவது உண்டு; பொய்ப் பெயர் சொல்லிச் சேர்த்து விட்டு வருவதும் உண்டு.

பெண் உரிமை அமைப்புக்கள் அரசாங்கத்தைக் கேலி செய்தும் கேள்வி கேட்டும் வழக்கு போட்ட பின்னால்தான் இதை நீக்கியிருக்கிறார்கள். இப்போது தாயின் பெயர் கொடுத்துச் சேர்க்கலாம். ஆனாலும் புறக்கணிக்கப்படும் இடத்தில் அவனுக்குப் படிப்பில் எப்படி நாட்டம் வரும்?

அறியும் பருவம் வரும். பிள்ளையின் தாய் கைவீசி நடக்கும் சந்தில் யாரைப் பார்த்து அவன் கற்றுக் கொள்வான்? எந்த ஒழுக்கத்தைப் புரிந்து கொள்வான்? பீடி, கஞ்சா அடிப்பான்; விற்பான்; கள்ளச் சந்தைக்குஏஜென்டாக இருப்பான்; அந்தப் பொருள்களை விற்பான்; சாக்கடை அகராதிகளைப் புரட்டிப் புரட்டிப் படிப்பான்; அவனது சர்வகலாசாலையில் இதெல்லாம் இலவசம். அடுத்து, ஓட்டு அரசியல்வாதிகளின் மோதல்களில் வீர விளையாட்டுக்களை வகுப்பு வாரியாகப் படித்துத் தேறி 'ரவுடி' பட்டமும் வாங்குவான். போலீஸ் என்றகேடு கெட்ட அரசாங்கக் கருவி ஏதாவது ஸ்டேசனில் அந்தப் பட்டத்துக்கு ஒப்பு எழுதி அங்கீகாரமும் கொடுத்துவிடும்; இது வாடிக்கை.



படிப்பகம்

www.padippakam.com

அவன் வளர வளர அருவறுப்பு எல்லாம் விட்டுப் போய், உணர்ச்சிகள் மரத்துப் போய் தாய்க்கும் அக்காள் தங்கச்சிக்குமே மாமா வேலை பார்ப்பான். சொந்தத் தாயையே கெட்டவார்த்தை சொல்லித் திட்டுவான். ஒழுக்கம் இல்லாமல் வளர்க்கப் பட்டு, தாய்—தந்தை, சுற்றம் என்று எந்த ஒழுங்கும் இல்லாமல் விட்டேத்தியாக வளருவதால் முரடனாகஇருப்பான். முரட்டுத்தனம் தான் தனக்குப் பலம் என்று அந்த இளைஞன் நம்புகிறான். தந்தை யாரோ, எந்த ஊரோ, என்ன முகவரியோ? அதனால் தாய்தான் அவனுக்கு எல்லாமும். அவன் சாகும் வரை தன் தாயைப் பற்றியும், தன்னைப் பற்றியும் குற்ற உணர்விலேயே வாழ்கிறான். தன்னை இப்படிப்பிறக்கும்போதே 'கேடி'யாக்கிவிட்ட சமூகத்தை பழிவாங்குவதே அவனுக்கு லட்சியம்.

விபச்சாரிகளின் பிள்ளைகளாய்ப் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக அவர்கள் தீண்டத்தகாதவர்களாகி விடுகிறார்களா? இது அவர்களின் குற்றமா? இப்படித்தான் பிள்ளை வளரும் என்று தெரிந்தும், எதிர்கால அச்சத்தால், பிள்ளை பெற்றுக் கொள்ள விபச்சாரி ஆசைப்படுகிறாள். காமத்தை, தனியைத் தேடி வரும் கூட்டத்துக்கு இது பிரச்சனையல்ல. அவளுக்கு இது பிரச்சனை; பிரச்சினை மட்டுமல்ல, பேர்சொல்லபிள்ளை வேண்டும் என்பது அவளது ஆசையும் கூட.

அவள் ஆசைப்படவே கூடாதா? பெற்றதும் பிள்ளையைக் கொன்று விட வேண்டுமா? பணக்காரன் தனது முறைகெட்ட பாலுணர்வு ஆபாசங்களுக்கு, வக்கிரங்களுக்கு விபச்சாரத்தைத் தொடங்கினான்; வர்க்க சமூகத்தில் அது ஒரு நழுவிய ஒழுக்கமாக நின்று விட்டது. சமூக வக்கிரத்தால் விளைந்த இப்பிரச்சனை—சாதாரணமல்ல. சமூகத்தில் லட்சக்கணக்கில் ஒட்டுண்ணியாக வாழ்ந்து, லட்சக்கணக்கில் சமூக விரோதிகளை அல்லவா பெற்றெடுத்து வருகிறார்கள் விபச்சாரிகள்? சீரழிந்த இச்சமூகத்தின் விளைவுக்கு அவளோ, அவளது பிள்ளைகளோ பொறுப்பா?

எவ்வளவுக்கு எவ்வளவுஒட்டு அரசியல் சீரழிந்திருக்கிறதோ அந்த அளவு இந்தச் சமூக விரோதிகள் பயன்படுத்தப்படுகிறார்கள். அரசுக்கு தேவைப்படுகிறது, அதனால் இந்த உதவாக்கரைப் பட்டாளம் மறுபடி மறுபடி உருவாக்கப்படுகிறது. மக்களுக்கு எதிர
வேலைகளைச் செய்ய அடி
குண்டர் பட்டாளமாக இது ப
படுத்தப்படுகிறது.

முன்னேற்றமான சமூகத்
விபச்சாரமோ, உடன் விளை
இந்தப் பட்டாளமோ தே
யில்லை. அதனால்தான் சோக
சமுதாயத்தில் இது ஒழிக்கப
கிறது. ஆனால் சீரழிந்த சமூ
தில், சீரழிந்த அரசியலு
ஆளும்கும்பலுக்குஇதுதேவைப்
கிறது. மருந்துச் செடியாக அ
கஞ்சாச் செடியாக—நோ
குணப்படுத்த அல்ல, நோ
உருவாக்க —இக்கூட்டம் வ
கப்படுகிறது.

ஆனால் , விபச்சாரிக
பிள்ளைகள் அவர்களே அறியா
அடிமைகளாக ஆக்கப்பட்டு
கிறார்கள். சீர்திருத்தம் அளி
படாமல் புறக்கணிக்கப்படுகி
கள். தேவையில்லாத சமயத்
வயதானவுடன் அவர்களின்
குப்பையாக விசப்படுவ
போல, அவர்களும் நோய
களாக வீசப்படுகிறார்கள்;
நேரங்களில் கொல்லப்ப
ஒழிக்கப்படுகிறார்கள். இது
டைய தவறு? அவர்களின் தவ

கல்கத்தா வேசிக்கிட
ஒன்றில் வேகும் லீலா என்ற
சொல்கிறார், "நான் என்ன
தோஷமாகவா இருக்கிறேன்?
வரை பத்தாயிரம் தடவைகளு
மேல் செத்துப்போகலாமா எ
யோசித்திருக்கிறேன். ஆ
நான் தற்கொலை செய்துகொ
முடியாது. ஆமாம். எனக்கு
மகன் இருக்கிறான். அவன்
துப் பெரியவனாக வேண்
அதைப்பார்க்க நான் உயி
இருக்க வேண்டும்."

லீலா உணர்ச்சிகளே
காமப்பிண்டமா? இல்லை. அ
பெற்ற பிள்ளை படித்து நா
முள்ளவனாக மாறுவானா?
யாது. ஆனால், ஒரு பாவ
அறியாத இப்படிப்பட்டவ
பிள்ளைகள் தண்டிக்கப்படு
ஏன்? அது சரிதானா? அதி
கரமான கொலைகள் செ
வனைக்கூட சந்தர்ப்பசூழ்நி
காரணம்காட்டி சட்டம் மன்னி
விடுகிறது. அதே சந்தர்ப்ப
நிலையை விபச்சாரிகளின் பிள்
களுக்கும் காரணமாகக் க
வதுதானே நியாயம்? வீட்
வெளியில் இரண்டு இடத்
சாக்கடையாக இருப்பது அவ
குற்றம் அல்லவே?

**சமூகம் இப்படி இருப்பதற்கு**
**பொறுப்பு? அரசுதானே?**



**விபச்சாரிகளின் பிள்ளைகள் என்பதால்**
**வாழ்க்கையே கிடையாதா?**

**அவர்கள் வளரும் சூழ்நிலை அப்படி:**
**சாக்கடை அகராதி; கஞ்சா விற்பனை,**
**மாமாத் தொழில், சாராயவிற்பனை;**
**அடிதடி குண்டர் அரசியல்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன். 55, நேரு நகர், வில்லிவாக்கம், சென்னை - 600 049. அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107-ஏ,
பெரியார் பாதை (மேற்கு), சென்னை-94. புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே

படிப்பகம்

www.padippakam.com





# கண்ணீர் சிந்தவும் காசுவேண்டும்!

எ ன்ராசா போயிட்டியேடா'' ன்று அந்த அவலக் குரல் மீண் மீண்டும் காதுகளில் ஒலிக் றது. பிடித்து நிறுத்துபவர்களை றிக் கொண்டு இரண்டு கைகளை உயரே தூக்கியபடி அந்தப் ண் ஓடிவரும் காட்சி கண் முன் ால் நிற்கிறது. மரணம் தரும் சாகம் கொடியது. இளம் பிஞ்சை ழந்த தாயின் சோகம் விவரிக்க பலாதது.

பேருந்து நிலையத்தின் இரைச் லைக் கிழித்துக் கொண்டு அவ து ஒற்றைத் தனிக்குரல் ஒலித் து. எல்லோரையும் போல நானும் ரும்பிப் பார்த்தேன். தட்டிப் த்துக் கொண்டு போன ாருளை மீட்க முயல்பவள் ால அவள் அரற்றிக்கொண்டே வந்தாள். அவ்ளுக்கு 25வயது ருக்கலாம். வயதுக்கு மீறிய முது மையைக் காட்டும் முகம். துயரம் துமையை மேலும் கூட்டியது. வளுக்கு 20 அடி முன்னால் ாளில் தூக்கிய குழந்தையுடன் ந்த இளைஞன் விடுவிடுவென ரையோ பிடிக்கப் போவது ால போய்க் கொண்டிருந்தான். யில் படாமலிருக்கப் போர்த்தி துபோல காவியேறிய வேட்டி ான்றை குழந்தையின் மீது ார்த்தியிருந்தான். இரண்டு ாடிகள். இரண்டே நொடிகள் ன்... அவன் கூட்டத்தில் கலந்து கண்ணிலிருந்து மறைந்துவிட் ன்.

அவள் ஓயமில்லை; எதிரில் ருவது யார், என்ன என்று கூடப் ராமல் அவள் ஓடிக் கொண்டி ந்தாள்.

''தே... இப்ப நிறுத்துறியா ல்லியா... என்னா நெனச்சிகிட் ருக்க நீயி. ஊர் போய் சேர்றதா னா'' அதட்டலாக வந்தகுரல் வள் கையைப் பிடித்து நிறுத்தி து.

அவன் அவளுடைய அண்ண க இருக்கக்கூடும். அவள் டங்கவில்லை. அவன் மீண்டும் தட்டினான் அடக்கினான்; அப் ரின் மிரட்டலுக்கு அஞ்சி அழு கயை அடக்கிய குழந்தையைப் ால அவள் கேவினாள். நெஞ்சு டித்து விடுமோ என்று அஞ்சத் க வகையில் அவள் கேவி ள்.

''அவளை அழவிடுங்களேன்'' று உரத்துக் கத்திவிடலாமா? டியாது. அங்கே அவள் அழுவ கு உரிமை இல்லை. எனவே டியாது. இதை நானு சொல்ல டியாது. பார்த்துக் கொண்டி த யாரும் சொல்ல முடியாது. ள் மீது கொண்ட அனுதாபத் விட ''எங்கே அவள் அழுது வாளோ'' என்ற அச்சமே லோங்கியது.

என்ன என்ன என்று ஆவ லாகக் கேட்ட ஒருவருக்கு இதை பார்த்து உறைந்து நின்றிருந்த கிழவி விளக்கம் சொன்னாள். ''பொணமின்னு தெரிஞ்சா பஸ்ல ஏத்தமாட்டாம்பா; இருக்கப்பட்ட வுங்க கார்ல கொண்டுபோவலாம். ம்ஹூம். இல்லாக் கொடுமை. என்னா செய்ய? மனசை கல்லாக் கிட்டு போக வேண்டியதுதான்.''

கன்றை இழந்த பசுகூட 'அம்மா அம்மா' என்று கத்தித் தீர்க்க முடியும். ஆனால் இவள் எதுவும் நடக்காதது போல, பிஞ்சை உதிர்த்த மரம் போல உணர்ச்சிகளற்று விறைத்து நிற்க வேண்டுமா?

சொகமில்லை என்று டவு னுக்கு பிள்ளையைத் தூக்கி வந்தி ருப்பார்களோ? பிள்ளை கண் விழித்துப் பார்க்கும்போது நாம் கண்ணயர்ந்து விடக்கூடாதென்று எத்தனை இரவுகள் அவள் கண் விழித்திருப்பாள்? அந்தப் பிள் ளைக்கு 3 வயது இருக்கும். 3 வருடங்கள்—ஆயிரம் காலைகள், ஆயிரம் மாலைகள், ஆயிரம் இரவுகள் பாலூட்டி, சீராட்டி, கொஞ்சி, அவன் மழலையில் தானும் பேசி .. அவனுடன் விளை யாடி...

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சென்றால் இந்தப் பெண்ணுக்கு மட்டும் என்னவாம்? அவள் அழக்கூடாது. ''ஐயோஎன் ராசா'' என்று கதறி கரை உடைக் கும் சோகத்தை வெளிக்காட்டக் கூடாது. அடக்கிக் கொள்ள வேண்டும். இதயம் வெடித்து சாவ தாயிருந்தாலும் அடக்கிக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இருக்கப்பட்ட வர்கள்தான் அழலாம். இல்லாதப் பட்டவர்கள் அழக்கூடாது. பாசத் துக்கு டாக்சி பிடிக்க முடியாது. அதற்குப் பணம் வேண்டும்.

வறுமை என்றால் என்ன வென்று தெரியுமா உங்களுக்கு? ஒருவேளை சோறு என்பது மட் டுமா வறுமை?

''சீ நாயேபோடா வெளியே'' என்ற பின்னாலும் 'சாமீ...' என்று வில்லாக வளைவது வறுமை.

கட்டிய பெண்டாட்டியை கையைப் பிடித்து இழுத்தவனிடம் கைகட்டி சேவகம் செய்வது வறுமை.

பத்து ரூபாய் காசுக்காக பட் டணத்துக்கு லாரியேறி 'வாழ்க... ஒழிக' என்று கோஷம் போடுவது வறுமை.

வறுமை என்றால் வயிற்றுப் பிரச்சினைதான் என்றா நினைக்கி றீர்கள்?

'பசி வந்திடப் பத்தும்பறந்து போம்! 'கேவலம்சோற்றுக்காகவா இதைச் செய்தான்?' நீதிபோத னைகள் எல்லாம் நிரம்பிய வயிற்றி லிருந்து வந்தவை. கவளச் சோற் றின் அருமை காய்ந்த வயிற்றுக் கல்லவா தெரியும்?

இது நல்லது; இது கெட்டது; இது ஒழுக்கம்; இது ஒழுக்கக்கேடு; இது அடிமைத்தனம்; இதுதான் சுயமரியாதை என்று மனம் சிந்திக் கும்போதே காய்ந்த வயிறு அவ னது மதிப்பீடுகளையெல்லாம் தின்று செரித்துவிடுகிறது. வறுமை மனிதனை விலங்காக்கு கிறது.

வறுமை கொடியது; காசிருப்ப வன்தான் சிரிக்க முடியும்; மகிழ முடியும். ஆனால் அழுவதற்கும் வறுமை தடையாகுமோ! காசில் லாதவளால் பிள்ளையைக் காப் பாற்ற முடியவில்லை. அழுவதற் கும் காசு வேண்டுமோ! என்ன நியதி இது?

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே, முகவர்களே—

கடந்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே அச்சுத்தாள் விலை அதிகமாகக் கூடிவிட்டது. முன் கூட்டியே தெரிவிக்க முடியாத அவசரத்திலும், தேவை கருதியும் இவ்விதழிலிருந்தே இதழ் விலையைக் கூட்டி ரூ 2-ஆக்கியுள்ளோம். நிலைமையை உணர்ந்து தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

—ஆசிரியர்